விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 07 வெள்ளிக்கிழமை (21.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153




## கொழும்பு துறைமுகநகர் சட்டமூலம்

# பாராளுமன்றில் நிறைவேற்றம்

### ஆதரவாக 148 வாக்குகள் எதிராக 59 வாக்குகள்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் பாராளுமன்றில் நேற்று நிறைவேறியது.

இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 148 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் வழங்கப் பட்டன.

(19ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில்

### 21 பேருக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சிஆடைத் தொழிற் சாலையில் பணியாற்றும் 21 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதியாகி யுள்ளதாக தெரியவந்

19

## புதிய சட்டமா அதிபராக தமிழரான சஞ்சயை நியமிக்க

### பாராளுமன்ற பேரவை இணக்கம்



(கொழும்பு)

இலங்கையின் பதில் மன்றாடியார் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜ ரட்ணத்தை புதிய சட்டமா அதிபராக நியமிக்க இலங்கையின் பாராளு

19

## வவுனியாவில் கொரோனாவால் ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியா வைத்திய சாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டி ருந்த பெண் ஒரு வர் கோவிட்

19

## இன்று இரவு முதல் 3 நாட்களுக்கு

# நாடு முழுவதும் மீண்டும் முடக்கப்படுகின்றது

### பயணத் தடை இறுக்கமாக பின்பற்றப்படும்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு) நாடு முழுவதும் இன்று இரவு 11 மணிக்கு அமுலாகவுள்ள பூரண பயணத் தடையின்போது கட்டுப்பாடுகள் மிக இறுக்கமாக பின்பற்றப்படும் என இராணுவத் தள பதியும் கோவிட் தடுப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்துள்ளார். மேலும் அதனை மீறுபவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என் றும் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### வலம்புரி வாசகர்களுக்கு...

கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக பயணத் தடை ஏற்படும். வலம்புரிப் பத்தி ரிகை அச்சுருவில் வெளி வராத காலப் பகுதியில் வலம் புரி தினசரிப் பத்திரிகையினை "வலம்புரி நாளிதழ்" Viber குழுவில் இணைந்து பார்வை யிட முடியும்.

**Viber குழுவில் இணைவது எப்படி?**

- உங்கள் தொலைபேசியில் Viberஐ ஓபின் செய்து வலது பக்க கீழ் மூலையில் உள்ள "More" என்ற குறியீட்டை அழுத்தவும்.
- அதன்பின் வலது பக்க மேல் மூலையில் உள்ள "QR" ஸ்கானை அழுத்தி இங்கு தரப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கான் செய் வதன் மூலம் வலம்புரி நாளிதழுடன் இணைந்து கொள்ளலாம்.

நாட்டில் அமுல்படுத்தப்படும் பயணத் தடைக் காலங்களில் வலம்புரியின் மின்னிதழ்களில்
**மரண அறிவித்தல்கள்**
இலவசமாக பிரசுரிக்கப்படும்
தொ.இல.
076 097 3127

## மனைவிக்கு கொரோனா எனக்கு அறிவிக்கவில்லை

### கிளிநொச்சியில் கணவன் பிள்ளைகளுடன் உணவு தவிர்ப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் உள்ள விடு யல் ஆடைத் தொழிற்

19

## சுன்னாகத்தில் எரிந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கொத்தியாலடி சுடலைவைரவர் ஆலயத்தின் பின்புறமாக எரிந்த நிலையில் முதியவர்

19

## யாழில் 62 பேருக்கு கொரோனாத் தொற்று

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 62 பேர் உட்பட வடக்கில் நேற்று 77 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறி யுள்ளார்.

19

## இலங்கையில் நேற்று 3,441 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் நேற்று 3441 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங் கையில் இதுவரையில் கொரோனாத் தொற்

19

# யாழில் கொரோனா நாளுக்கு நாள் அதிகரிப்பு பொது மக்கள் அலட்சியமாக செயற்படுகின்றனர்

## வைத்தியசாலையிலும் இடப்பற்றாக்குறை – அரசாங்க அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனா தொற்று வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. ஆனால் பொதுமக்கள் அலட்சியமாக செயற்படுவதை காண முடிவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கொரோனா நிலைமை தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும்முகமாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைவரம் சற்று அதிகரித்து செல்லும் நிலை காணப்படுகிறது. பொதுவாக வடமாகாணத்தில் அதிகரித்து செல்லும் போக்கு காணப்படுகிறது.

ஆகவே நாம் அனைவரும் இச் சந்தர்ப்பத்தில் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய காலகட்டமாகும். பொதுமக்களை இக்கொடிய தொற்றிலிருந்து பாதுகாக்கவே இப் பயணக் கட்டுப்பாடுகள், தடைகள் விதிக்கப்பட்டன.ஆனால் பொதுமக்கள் அலட்சியப் போக்கில் செயல்படுவதை காணமுடிகிறது. வைத்தியசாலைகளில் தற்போது பாரிய இடப்பற்றாக்குறை காணப்படுகிறது. இடை நிலை பராமரிப்பு நிலையங்களை ஆரம்பித்தோம். அவை கூட தற்போது நிரம்பும் நிலை காணப்படுகிறது.

இத்தொற்றானது தற்போது ஊடுருவி பொதுமக்கள் அரசாங்க மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் என பலரையும் பாதித்துள்ள நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் அரச அலுவலகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயக்கும் நிலைமைஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இத்தொற்றால் சுகாதார பணியாளர்கள் கூட பாதிக்கப்பட்ட நிலைமை காணப்படுகிறது. ஆகவே பொதுமக்கள் தமது அலட்சிய போக்கில் இருந்து தொற்றை ஏற்படுத்த காரணமாக இருந்து அவர்களை எதிர்காலத்தில் பராமரிக்க கூட இயலாத சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாமென பொதுமக்களை கேட்டுக் கொள்கிறேன்.

சில பொதுஇடங்களில் இத்தொற்று அபாயம் நீடிக்கிறது. அவ்விடங்களுக்கு செல்லும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து, தொற்று நீக்கி திரவம் பாவிக்க வேண்டும்.

தற்போது தொற்றாளர்களை பராமரிக்க பலமான ஆளணிபலம் தேவை. ஆளணிப் பலம் பலவீனமடைந்து சென்றால் எதிர்காலத்தில் பாரிய சவாலை எதிர்கொள்ள நேரிடும். எனவே தம்மையும் தமது குடும்ப உறவுகளையும் சமூகத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும். இதற்கு மிகுந்த விழிப்புணர்வு அவசியம் என அவர்மேலும்தெரிவித்துள்ளார்.(ம-03.33)

---

**நல்லை மங்கையர்க்கரசியின்**

**மனம் நெகிழஞ்சலி**

எமது பாடசாலையின் ஆசிரியை
**செல்வி கிருசாந்தினி**
**அருமைநாதன்** அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்



**குருநாதன் அருமைநாதன்**

அவர்கள் 16.05.2021 அன்று
காத்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின்
ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா / நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

---

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின்
அதிபர்
**திரு நடேசு தயாளன்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**இந்துமதி நடேசு**

அவர்கள் நேற்று (20.05.2021)
வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருடன் பங்குகொள்வதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி**

---

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின்
கணக்கியல் பாட ஆசிரியையும் பாடசாலை
அபிவிருத்திச் சங்க பொருளாளருமான
திருமதி **தர்மினி தினேஸ்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**இந்திராணி மாணிக்கலிங்கம்**

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு
நாங்களும் அவரது
குடும்பத்தினருடன் துயர் பகிர்வதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!



மலர்வு 30.09.1950 உதிர்வு 19.05.2021

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி**

---



## அம்மா பகவான் கூட்டுப் பிரார்த்தனை

உலகெங்கும் இருந்து இந்த கொடிய கொரோனா வைரஸ் அழிந்துபோக வேண்டியும் தங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியும் தினமும் மதியம் **11.50 am** முதல் **12.10 pm** வரை கூட்டுப்பிரார்த்தனை நடை பெறுகின்றது.

இதனை **https://youtube.com/c/SriParamjyothiEkathva Sangam SriLanka** என்ற யூடியூப் சேனல் வழியாக பார்வையிட்டு நீங்களும் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்து வேண்டிய வரத்தினையும் அடைந்து புண்ணியத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இதே **youtube channel** வழியாக தினமும் மாலை 7.30 **pm** மணி முதல் 8.00 **pm** வரை நடைபெறும் **online** வகுப்புகளில் கலந்து கொண்டு தினமும் ஒரு வரத்தினை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களை 077 364 7436 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

நன்றி நமஸ்காரம், ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கனகசபாபதி**
**கௌரிதரன்**

பிறப்பு 08.09.1981 இறப்பு 21.05.2018

உன் உயிர்
எங்களை விட்டு போனாலும்
உன் உயிர் எங்களுக்குத் தந்த
நினைவுகள் என்றும் போகாது.
ஆயிரம் உறவுகள் வந்து போனாலும்
அண்ணா உனக்கு நிகராகாது
ஒரு உறவும்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

என்றும் உன் நினைவுகளுடன்
**தாய், தந்தை, சகோதரர்கள்**

# வருமுன் காத்தலே சிறந்தது

# இரண்டு கிழமைகள் அவதானமாக இருந்தால்

# நோய் பரவலை கட்டுப்படுத்தலாம்

## பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

**கொரோனாத் தொற்றானது யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவி வருகிறது. இதிலிருந்து தப்புவதற்கு முற்பாதுகாப்பு வழிமுறைகளே சிறந்தது. எம்மையும் பாதுகாத்து எம் உறவுகளையும் பாதுகாப்போம்.**



இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப்போல் வட மாகாணத்திலும் கொவிட் தாக்கம் அதிகரித்து உள்ளது. தற்போது பரவும் வைரஸ் தாக்கத்தினால் 20 தொடக்கம் 60 வயதுவரையானோர் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டவர்களில் 10% ஆனோர் சுவாசிப்பதற்குச் சிரமப்படுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இவர்களுக்கு விசேட மருத்துவப் பராமரிப்பும் பிராணவாயு சிகிச்சையும் அத்தியாவசியமாகின்றது. கொரோனா நோயாளி ஒருவரிலிருந்து சுமார் 500 பேருக்குத் தொற்று ஏற்படலாம்.

எனவே இத்தொற்றுத் தொடர்பாக அலட்சியப் போக்கினை கடைப்பிடித்தலாகாது. ஒருவர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகாது பாதுகாப்பதனால் அவர் தன்னையும் தான் சார்ந்த குடும்பத்தினையும் தனது சமூகத்தையும் நோய்ப் பரம்பலில் இருந்து பாதுகாக்கின்றார். இத்தொற்றில் இருந்து பாதுகாப்பினைப்பெற தற்போதைய சூழலில் இரட்டை முகக்கவசம் அணிதல் நல்லது.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், கைகளை அடிக்கடி கழுவுதல், பயணங்களைத் தவிர்த்தல், சனத்திரள்மிக்க இடங்களைத் தவிர்த்தல், ஒன்றுகூடலைத் தவிர்த்தல், தொற்றுநீக்கி பாவித்தல், போசாக்குள்ள உணவுகளை உண்ணல், தடுப்பு மருந்து ஏற்றுதல், குளிரூட்டப்பட்ட இடங்களைத் தவிர்த்தல்.

மேற்கூறிய முறைகளைக் கடைப்பிடித்தால் தொற்று ஏற்படுவதனை 100% தவிர்க்கலாம். ஏனையவர்களுக்கும் தொற்று பரவுதலை தடுக்கலாம்.

மேலும் நோய் அறிகுறி உடையவர்கள் வீடுகளில் 12 நாட்கள் தனிமைப்படுத்திக் கொண்டால் நோய் ஏனையவர்களுக்குத் தொற்றாது.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது அவர்களை வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை அளிப்பதற்கு போதிய இடவசதிகள் இருக்காது.

எனவே இந்த அபாயத்தினை உணர்ந்து இரண்டு கிழமைகள் சுய தனிமைப்படுத்தலை ஒவ்வொரு குடும்பமும் மேற்கொள்ளும்போது நோய்ப் பரம்பல் குறையும். தேவையற்ற விதத்தில் நண்பர்களின் வீடுகள், உறவினர் வீடுகளுக்குச் செல்வதனைத் தற்போது தவிர்த்தல் நல்லது.

நோயாளர் தொகை அதிகரிக்கும்போது மருத்துவ ஆளணிப்பற்றாக்குறை ஏற்படும்.

நோய் அறிகுறியற்ற தொற்றாளர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய வசதிகள் அளிக்கப்படலாம். கொரோனாத் தொற்று இன்று உலகிற்கு பாரிய நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது.

உலக சமூக இயக்கத்தை 10 வருடங்கள் பின்னோக்கி நகர்த்திஉள்ளது. இது ஒரு நிசப்தமான உயிரியல் யுத்தமாகும். ஆரம்பத்தில் பரவிய விதம் இயற்கைக்கு மாறாகவே உள்ளது.

மேலும் இந்த வைரஸ்கள் அடிக்கடி ஏற்படும் விகாரங்களும் பாதகமான திரிபுகளும் இயற்கையான நிகழ்தகவுக்கு அப்பால் பயம் கொள்ள வைக்கின்றது.

தற்போதைய சூழலில் கொரோனாத் தாக்கத்தில் இருந்து தப்புவதற்கு முற்காப்பு வழிகளே மிகச்சிறந்தவை ஆகும். இரண்டு கிழமைகள் அவதானமாக இருப்பதனால் நோயினைக்கட்டுப்படுத்தலாம். நோய்த்தடுப்பு மருந்துகளை அனைவரும் பெறுவது இரண்டு வருடங்களுக்குச் சாத்தியமாகாது. நோயாளிகள் அனைவருக்கும் சிகிச்சை அளிப்பதும் சாத்தியமாகாது போகலாம். எனவே வருமுன் காத்தலை முன்னெடுத்தலே இன்று எம்முன் உள்ள தலையாய பணியாகும். இதனை ஒவ்வொரு மனிதனும் சிந்தையில் கொள்ள வேண்டும் என மருத்துவர் யமுனாநந்தா குறிப்பிட்டுள்ளார். (5-4-33)

# அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழ் கட்சிகள் கூட்டாக கோரிக்கை



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து தமிழ் அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, அரசியல் கைதிகள் பற்றிய விபரங்களை தமிழ் தரப்பினர் அமைச்சரிடம் ஒப்படைத்தனர்.

அதன்படி, விசாரணை முடியாத கைதிகள், தண்டனை வழங்கப்பட்ட கைதிகள் என அரசியல் கைதிகள் குறித்த முழுமையான விபரத்தை கையளித்ததுடன், அவர்களை விடுவிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், இது குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி முடிவை அறிவிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அண்மையில் அனுப்பிய கடிதத்தை தொடர்ந்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

நல்லூர் றோட்டறிங் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை சேமித்து வையுங்கள் - சவேந்திர சில்வா

(கொழும்பு)

பயணத் தடை விதிக்கப்படவுள்ளமையினால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வீட்டில் சேமித்து வைக்குமாறு இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து வைத்துக் கொள்ளுங்கள் என நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். இந்நிலையில் ஒரு வாரகால பயணத் தடை விதிக்கப்படும்.

பயணக்கட்டுப்பாட்டுக் காலத்தில் தேவையின்றி வீதிகளில் யாரும் பயணிக்கக்கூடாது.

வெளியில் இருந்து வருபவர்களை வீடுகளில் வைத்துக் கொள்ளக் கூடாது. இப் பயணக் கட்டுப்பாடானது கொவிட் தொற்றுப் பரவுவதை தடுப்பதற்கு உதவும் என சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியிருப்பதாகவும் இதனடிப்படையில் ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் இப் பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# கோபா இத்தாலி கால்பந்து போட்டி
# ஜுவெண்டஸ் அணி சம்பியன்




ஒவ்வொரு ஆண்டும் விளையாடப்படும் கோபா இத்தாலியா கால்பந்து தொடரின், நடப்பு ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை ஜுவெண்டஸ் அணி வென்றுள்ளது.

சிட்டாடெல் ட்ரிகோலர் விளையாட்டரங்கில் உள்ளூர் நேரப்படி நேற்று வியாழக்கிழமை நடைபெற்றபோட்டியில், ஜுவெண்டஸ் அணியும் அட்லாண்டா அணியும் பலப் பரீட்சை நடத்தின.

ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ஜுவெண்டஸ் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இதில் ஜுவெண்டஸ் அணி சார்பில், தேஜன் குலு செவ்ஸ்கி போட்டியின் 31 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் பெடரிகோ சிஎ 73ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் என இரண்டு கோல்கள் அடித்தனர்.

அட்லாண்டா அணி சார்பில், ருஸ்லான் மாலினோவ்ஸ்கி போட்டியின் 41ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். கோபா இத்தாலியா கால்பந்து தொடரில், ஜுவெண்டஸ் அணி அதிகபட்சமாக 14முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது. (4-6)

## பருவகால ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் இறுதித் திகதி நீடிப்பு



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேசிய கிரிக்கெட் வீரர்களுக்கான 2021/2022 ஆம் ஆண்டு பருவகாலத் துக்கான புதிய ஒப் பந்தத்தில் கையெழுத்திடும் இறுதித் திகதி நீட்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தின் இலங்கை கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுத்தலை வரான அரவிந்த டி சில்வா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் சூம் முறையில் நடைபெற்ற ஊடக சந்திப் பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.2021/2022 ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான புதிய ஒப்பந்தத்துக்கு கையெழுத்திடும் இறுதித் திகதிநேற்றாகும்.

எனினும், தேசிய கிரிக்கெட் குழாத்தில் இடம்பெற்றுள்ள பல கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளதால் அவர்கள் நாடு திரும்பியதும் ஒப்பந்தத்தை வாசித்துப் பார்த்து கையெழுத்திடலாம் என அரவிந்த டி சில்வா தெரிவித்தார். (4-6)

## ஜெனிவா ஓபன் டென்னிஸ்; ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வி



களிமண் தரையில் நடைபெறும் ஜெனிவா ஓபன் டென்னிஸ் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த 2ஆவது சுற்றில் 8-ம் நிலை வீரரான பெடரர், தரவரிசையில் 75-வது இடம் வகிக்கும் பாப்லோ அந்துஜாருடன் மோதினார்.

ஒரு மணி 52 நிமிடங்கள் நீடித்த விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 4-6, 6-4, 4-6 என்ற செட் கணக்கில் பெடரர் அதிர்ச்சிகரமாக தோல்வியை தழுவினார்.

கடைசி செட்டில் 4-2 என்ற கணக்கில் முன்னிலை வகித்த பெடரர் அதன் பிறகு வரிசையாக 4 கேம்களை தவற விட்டு வீழ்ந்து போனார்.

39 வயதான பெடரர் அடுத்து 30 ஆம் திகதிதொடங்கும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க திட்டமிட்டு இருக்கிறார்.

'இந்த சீசனில் நான் மிக குறைந்த ஆட்டங்களில் மட்டுமே விளையாடி இருக்கிறேன்.

எனது ஆட்டத்திறன் எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன்.

தற்போதைய நிலைமையில் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் வெல்வது குறித்து நினைத்து கூட பார்க்க முடியாது. (4-6)

## இலங்கை கிரிக்கெட் தலைவராக ஷம்மி சில்வா



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவராக ஷம்மி சில்வா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்திருந்தவர்கள் தமது வேட்பு மனுக்களை மீளப் பெற்றதையடுத்து, ஷம்மிசில்வா போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்றுக் காலை இடம்பெற்றது. 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆண்டு காலப்பகுதிக்கு ஷம்மி சில்வா இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக செயற்படுவார். (4-6)

## ஒலிம்பிக்கை பாதுகாப்பாக நடத்துவதில் முழுக் கவனமும் உள்ளது

32ஆவது ஒலிம்பிக் விளையாட்டு திருவிழா ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜுலை 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதிவரை அரங்கேறுகிறது.

இதில் 205 நாடு களை சேர்ந்த 11 ஆயிரத் திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஒலிம்பிக் ஏற்பாடுகள் குறித்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தாமஸ் பேச், உள்ளூர் போட்டி ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆலோசனை நடத்தினார்.

அவர் கூறுகையில், 'கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு கமிட்டிக்கு கூடுதலாக மருத்துவ ஆலோசகர்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கொரோனா தடுப்பு விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்த வேண்டும்.

ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் பாதுகாப்பான வழிகளில் நடைபெற வேண்டும் என்பதே எங்களது பிரதான நோக்க மாகும்.

ஒலிம்பிக் போட்டிக்கு வரும் வீர, வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், உதவியாளர்கள், அதிகாரிகள் ஒலிம்பிக் கிராமத்தில் தங்குவார்கள்.

அவர்களில் தற்போதைய தருணத்தில், 75 சதவீதம் பேர் கொரோனா தடுப்புசி போட்டு இருப்பார்கள் அல்லது ஒலிம்பிக் போட்டிக்குள் போட்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

இந்த எண்ணிக்கை 80 சதவீதத்துக்கு மேல் உயர்வதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதாக நம்புகிறேன்.

ஏனெனில் பாதுகாப்பே முதலில் முக்கியம். ஒலிம்பிக் தொடக்க விழாவுக்கு இன்னும் 64 நாட்களே உள்ள நிலையில் ஒலிம் பிக்கை பாதுகாப்பாக நடத்துவதில் நமது முழு கவனமும் இருக்கவேண்டும்' என்றார்.(4-6)

# நடைமுறைகளை இறுக்கமாக்காவிடின் பேரழிவைத் தடுக்க முடியாது



(கொழும்பு)

**கொரோனா பரவல் நிலைமையைப் பொறுத்தவரை இலங்கை ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. இப்போதே சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் ஒரு பெரிய பேரழிவில் முடிவடையும் என ஐ.டி.எச்.மருத்துவமனையின் மூத்த ஆலோசகர் மருத்துவர் கலாநிதி ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.**

வரவிருக்கும் விடுமுறையுடன் கூடிய வாரங்களால் ஏற்படும் பெரிய அழிவைத் தவிர்க்க வேண்டுமானால், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒத்துழைப்புடனும் சரியான முறையிலும் எடுப்பது மிக முக்கியமானது என்று அவர் ஊடகங்களுக்கு நேற்று தெரிவித்தார்.

தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால், இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்களில் நாடு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ளும் என்பது உறுதி. அதன்படி, மக்கள் முகக் கவசங்களை சரியாக அணிய வேண்டும், கை சுத்திகரிப்பானை பயன்படுத்த வேண்டும், கைகளை சரியாகக் கழுவ வேண்டும், உடல் ரீதியான தூரத்தை பராமரிக்க வேண்டும். பெரிய கூட்டங்களைத் தவிர்ப்பதும் முக்கியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன்பு எங்கள் மோசமான நடத்தைக்கான விளைவை தற்போது அனுபவிக்கின்றோம். மத ரீதியாகவும் சுகாதார விதிகளை பின்பற்ற நாங்கள் மீண்டும் தவறினால், ஒரு பெரிய பேரழிவு தவிர்க்க முடியாதது என்று அவர் வலியுறுத்தினார். (நி-4)

## தேசிய கண் வைத்தியசாலைக்கு வருவதைத் தவிருங்கள்

### வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடரும் கொவிட்-19 பரவல் காரணமாக தேசிய கண் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருகை தருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நோயாளர்கள் தங்களது கண்களுக்கு சிகிச்சை பெறுவதற்கு அருகிலுள்ள அரச வைத்தியசாலையின் கண்நோய் சிகிச்சைப் பிரிவை நாடுமாறும் தெரிவித்துள்ளது. (நி-4)



வேல்ட்விசன் நிறுவனத்தினால் ஒரு தொகுதி சுகாதார பொருட்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரிடம் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு பொருட்களை வழங்கி வைத்தனர். (படம்: தவசீலன்)

## நிதி மோசடி;இருவர் கைது

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ரப் (Tab) விற்பனை செய்வதாக கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட இருவர் கொள்ளுப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர். வர்த்தக நிலையமொன்றை நடத்தும் போர்வையில் சந்தேகநபர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

11 மில்லியனுக்கும் அதிக பணம் சந்தேக நபர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் 70 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு - முகத்துவாரம் மற்றும் மொறட்டுவை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## ராஜபக்ஷ ஆட்சி படுமோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது ராஜபக்ஷ ஆட்சியின் படுமோசமான தோல்வியை வெளிப்படுத்துவதாக உள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் தற்போது எழுந்துள்ளன. இதற்கு அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளே காரணமாகின்றது.

நாட்டிற்கு நன்மை ஏற்படும் வகையிலேயே எந்தவொரு பொருளாதார சட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆனால் உலகில் எந்தவொரு நாடும் செய்யாத விடயத்தை துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில் அரசாங்கம் உள்ளடக்கியிருந்தது. அதன் பாரதூரதன்மையை உணர்ந்தே பலரும் உயர் நீதிமன்றில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். நாட்டிற்கு நன்மை ஏற்படும் வகையில் தீர்ப்பும் அமைந்துள்ளது என ரணில் தெரிவித்தார். (நி-4)

## ஒட்சிசன் சிலிண்டர்கள் உட்பட மருத்துவ உபகரணங்களை வழங்கியது யுனிசெப்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் உதவியுடன் ஒட்சிசன் சிலிண்டர்கள் உட்பட முக்கியமான உபகரணங்களை யுனிசெப் நிறுவனம் சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு உதவும் வகையில் இந்த பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களத்தின் நிதியுதவியுடன் இந்தப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பொருட்களை இலங்கைக்கான அவுஸ்திரேலிய பணிக்குழுவின் தலைமை அதிகாரி டேவிட் ஹோலியும் ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளர் எம்மா பிரிகாமும் யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டியும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் வழங்கிவைத்தனர். அதன்படி, 291 ஒட்சிசன் சிலிண்டர்களும் 342 ஒட்சிசன் ரெகுலேட்டர்களும் 2490 முகக் கவசங்களும் 20 தீயணைப்பு கருவிகளும் நாட்டுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (நி-4)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்.தம்பிப்பிள்ளை சங்கரசிவம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வருபவரும் தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய முன்னாள் பொருளாளரும் இறுதிவரை ஆலய வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தவருமான

**தம்பிப்பிள்ளை சங்கரசிவம்**

அவர்கள் 20.05.201 நேற்று கனடாவில் இறைபதமடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக்கொண்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய நிர்வாக சபையும் தாவடி வாழ் மக்களும்

# வீட்டிலிருந்தவாறே கற்க அனைத்து ஏற்பாடுகளும் தயார்



## வடமாகாண கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் தற்போது நிலவுகின்ற கொவிட் தொற்று நிலைமை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலிருக்கின்றன. மாணவர்கள் தற்போது வீட்டிலிருந்து கற்க வேண்டிய சூழல் நிலவிக் கொண்டிருக்கிறது என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடமும் இதே போன்றதொரு நிலைமை தான் காணப்பட்டது. கடந்த வருடம் பரீட்சைகள் சற்றுக் காலதாமதம் செய்யப்பட்டாலும் உரிய பாடத் திட்டத்தின்படி பரீட்சைகள் நடைபெற்றன.

இந்தவருடமும் தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பன பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கின்றன.

மாகாணக் கல்வித் திணைக்களம் பல கற்றல் காணொளிகளைத் தயாரித்து தரவேற்றம் செய்துள்ளனர்.

அந்தவகையில் யூடியூப் இல் LMDM என்ற முகவரியிலும், அதேபோன்று எங்கள் குருகுலம் தொலைக்காட்சியில் கல்வி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் Channelnie என்ற யூடியூப் தளத்திலும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

உரிய நேரத்தில் மேற்படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுப் பயனடையலாம். உரிய நேரத்தில் பார்க்க முடியாமல் தவறவிடுபவர்கள் கூட யூடியூப் தளத்திலும் அவற்றைப் பார்வையிடலாம்.

இணையவழி மூலம் தரம்- 05, க.பொ.த. சாதாரண தரம், உயர்தரத்திற்கு மாதிரிப் பரீட்சைகள் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

வீட்டிலிருந்தவாறு மாணவர்கள் தங்கள் கற்றல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் தங்கள் பங்களிப்புக்களை வழங்குவர்.

அவர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

(5-4-18-33)

1.EMIS NP- www.edudept.np.gov.lk என்ற இணையத்தளத்தில் Learning Materials என்பதனை தெரிவு செய்தல் வேண்டும்.

2.LMDM- https://www.youtube.com/channel/UCVoe9Fy9oYClfk5j1qVaihA YouTube (www.youtube.com) இணையத்தளத்தில் LMDM என தட்டச்சிட்டு தேடுவதன் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

3.குருகுலம்- https://www.youtube.com/channel/UChr7K9dI0ZkPFm1AuXyXW-g YouTube (www.youtube.com) இணையத்தளத்தில் channelnie என தட்டச்சிட்டு தேடுவதன் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

4. DP Education- https://www.youtube.com/channel/UC0CXMeU0432E MgBnIBaY_ya YouTube (www.youtube.com) இணையத்தளத்தில் DP Education என தட்டச்சிட்டு தேடுவதன் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

5.E-Thaksalawa- https://www.e-thaksalawa.moe.gov.lk இணைய உலாவியில் ethaksalawa என தட்டச்சிட்டு தேடுவதன் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# புனரமைப்பு பணிகளை உடன் ஆரம்பிக்கவும்

## மாநகர முதல்வர்

(நல்லூர்)


ஐ றோட் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்ற யாழ். மாநகர வீதிகளின் வேலைத்திட்ட முன்னேற்றங்கள் தொடர்பான கள ஆய்வு பணி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கள ஆய்வில் யாழ். மாநகர முதல்வர், பொறியியலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், ஐ றோட் திட்ட ஒப்பந்தகாரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தற்போது பிறவுண் வீதியில் வடிகால் நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன. குறித்த வேலைகள் நிறைவடையாத காரணத்தினால் வீதி அமைக்கும் பணிகள் தாமதமடைகின்றன.

எனவே வீதிக்கு குறுக்காக வடிகால் செல்லும் பகுதிகளை தவிர்த்து வீதியைப் புனரமைப்பு (காப்பெற் இடும்) செய்யும் வேலைகளை பகுதி பகுதியாக உடன் ஆரம்பிக்குமாறு மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.



அதற்கிணங்க அவ் வேலைத்திட்டங்களை உடன் முன்னெடுப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். அத்துடன் சிவன் அம்மன் வீதி, புதிய சிவன் வீதி போன்ற வீதிகளின் புனரமைப்பு வேலைகளையும் பார்வையிட்டதுடன் அவ்வீதி வேலைகளை விரைவுபடுத்துமாறும் வைமன் வீதி வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறும் மாநகர முதல்வர் கேட்டுக் கொண்டார். (5-4-18-33)




# பொருத்தமான இடத்தை தெரிவு செய்ய வேண்டும்

## நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியை கொரோனா விடுதியாக மாற்றிய செயற்பாட்டிற்கு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதியை கொரோனா விடுதியாக மாற்றிய நிர்வாகத்தின் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இருக்கும் ஒன்றை அழித்து இன்னொன்றை உருவாக்குவது எமது சமூகத்தை பின்னடையச் செய்யும். தென்மராட்சி, பூநகரி மற்றும் பளைப் பிரதேச மக்கள் பயன்படுத்தும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி கட்டாயம் இருக்க வேண்டும்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை வடமாகாண சுகாதாரப் பணிப்பாளருடன் பேசி மகப்பேற்று விடுதியை மீள அதே கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களை தனிமைப்படுத்திதங்க வைக்க பொருத்தமான வேறு சில கட்டடங்கள் இருக்கின்றன என அவர் தெரிவித்தார்.

(5-4-30)

# இளைஞர்களின் பங்களிப்பின்றி ஏற்படாது முன்னேற்றம்

(சாவகச்சேரி)

இளைஞர்களின் பங்களிப்பு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்திற்கு அவசியம் தேவை என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்ஷன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச் சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது வைத்தியசாலையின் குறை நிறைகள் தொடர்பாக சபையில் கலந்துரையாடப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முற்போக்கு சிந்தனை உடைய இளைஞர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் தாமாக முன்வந்து இணைய வேண்டும்.

முற்போக்கு சிந்தனை உடைய இளைஞர்கள் இணையும் போது தான் சகல செயற்பாடுகளையும் வளம்பெற முன்னெடுத்துச் செல்ல முடியும் எனஅவர்தெரிவித்தார்.(5-4-30)

## எச்சரிக்கை! அவதானம்!

# ஆபத்தான 4 வைரஸ்களில் 3 வைரஸ்கள் இலங்கையில்

## –ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகம்–

(கொழும்பு)

**உலகில் மிக அபாயம் மிக்கவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 4 உருமாறிய வைரஸ்களில் 3 வைரஸ்கள் இதுவரையில் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளன.**

இவை சமூகத்தில் பரவியுள்ளனவா? என்பது தொடர்பில் தொடர்ந்தும் தீவிரமாக கண்காணித்து வருவதாக நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் மூலக்கூறு வைத்திய நிபுணர் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்தார்.

பிரித்தானியா, இந்தியா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளில் இனங்காணப்பட்ட வைரஸ்கள் இலங்கையிலும் இனங்காணப்பட்டுள்ளதாக அண்மையில் ஸ்ரீஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவபீடம் தெரிவித்திருந்தது.

இந்த வைரஸ்களுடன் இந்தியாவில் பரவும் வைரஸும் மிகவும் அபாயமுடையவையாகும் என்று உலக சுகாதார ஸ்தானம் அடையாளப்படுத்தியுள்ளதாக பேராசிரியர் நீலிகா மலவிகே மேலும் தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மிகவும் அபாயம் மிக்கவை என்று உலக சுகாதார ஸ்தாபனத்தினால் 4 உருமாறிய வைரஸ்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பிரித்தானியா, தென்னாபிரிக்கா, பிரேஸில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் பரவும் வைரஸ்களே இவ்வாறு அபாயம் மிக்கவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வைரஸ்கள் ஏனைய வைரஸ்களை விட பரவும்வேகம் மிக அதிகமாகக் காணப்படும் அதேவேளை, இதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்களும் மரணங்களும் அதிகரிப்பதோடு தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்துதல் என்பனவே இவை அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்படுவதற்கான காரணமாகும்.

இவை தவிர கொவிட்-19 வைரஸிலிருந்து உருமாறிய நூற்றுக்கணக்கான வைரஸ்கள் உலகிலுள்ளன. பிரித்தானியா, தென்னாபிரிக்கா, பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இனங்காணப்பட்டுள்ள வைரஸ்கள் இவ்வாறு அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வைரஸ்கள் இலங்கைக்குள் பரவியுள்ளனவா? என்பது தொடர்பில் சுகாதார தரப்பினர் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றனர். அவ்வாறு இவை இனங்காணப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எந்த வைரஸ் இனங்காணப்பட்டாலும் அவற்றிலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

இந்தியா மற்றும் பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட வைரஸ்கள் மிகவும் வேகமாக பரவக்கூடியவையாகும். எனவே அத்தியாவசிய தேவைகளுக்காக அன்றி வேறு எந்தக் காரணிக்காகவும் வெளியிடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்வதே இதன் பரவலைக் கட்டுப்படுத்துவதில் முக்கியத்துவம் பெறுகிறது என அவர் தெரிவித்தார். (நி-4)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சித்திரை
சிபா: 36 ½ செவ் 4 சூரி 1 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: உணவகம் (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: அழகான மெல்லிய பெண்
தொ.இ: B/1190

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
சிபா: 4 ½ செவ் 3 சூரி 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS Doctor
எதிர்பார்ப்பு: Doctor மட்டும், மணமகன் விவாகரத்து ஆனவர்
தொ.இ: B/1201

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
சிபா: செவ் 12 சூரி 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L புடைவை வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பண்பான பெண்
தொ.இ: B/1239

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
சிபா: 23 ½ செவ் 9 சூரி 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L கடை ஊழியர்
எதிர்பார்ப்பு: பொதுநிறமானவராகவும்யாழ். வசிக்கக்கூடியவர் விரும்பத்தக்கது.
தொ.இ: B/1251

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1965 இந்து
நட்சத்திரம்: மகம்
சிபா: 21 ½ செவ் 3 சூரி 12 இல்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: அரச ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ: G/5116

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பூரம்
சிபா: 52 செவ் 1 சூரி 9 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: தனியார் கூட்டுறவுக் கணக்காளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/5127

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி
சிபா: 21 செவ், சூரி 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5138

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
சிபா: 53 செவ் 11 சூரி 10 இல்
உயரம்: 169cm
தகைமை/தொழில்: பல்கலைக்கழகம் BA, mur Planning Officer
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்
தொ.இ: G/5143

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கு தொற்று



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவரது குடும்பத்தினரும் அவருடன் தொடர்பில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரனுக்கும் நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் அம்புலன்ஸ்களுக்கு கட்டணம் அறவிடப்படாது

(கொழும்பு)

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் அனைத்து அம்புலன்ஸ்களுக்கும் கட்டணம் அறவிடப்படாது என நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-4)

# சீன உணவகத்தில் பணிபுரியும் ஒன்பது பேருக்கு தொற்று

(கொழும்பு)

இரத்மலானையில் உள்ள ஒரு முன்னணி சீன உணவகத்தில் பணியாற்றும் ஒன்பது ஊழியர்களுக்கு கொவிட்-19 வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நோய்த்தொற்றுகள் ஏற்பட்டதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து உணவகத்தை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உணவகத்தின் 13 ஊழியர்கள் மீது பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 9 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# சேதன பசளைகளை உற்பத்தி செய்ய அனைவரும் முன்வர வேண்டும்

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்டத்திற்கு 27 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான இயற்கை உரம் தேவையாக உள்ளது. அதனை விரைவாக உற்பத்தி செய்ய வேண்டியுள்ளமையால் முயற்சியாளர்கள் மற்றும் இளைஞர்கள் கமநல அபிவிருத்தி திணைக் களங்களை தொடர்புகொள்ளுமாறு வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் என்.விஸ்ணுதாசன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், விவசாயத்திற்கான இரசாயன பசளை மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. இதனால் ஏற்பட்ட சில உடல் நலப் பிரச்சினைகளைக்கருத்தில்கொண்டு இரசாயன பசளைகளை முற்று முழுதாக நிராகரித்து சேதன இயற்கை பசளை களை உற்பத்தி செய்யும் திட்டத்தினை அரசு முன் னெடுத்துள்ளது.

குறிப்பாக இயற்கை பசளையை குறிப்பிட்ட காலத் தில் உற்பத்திசெய்ய முடி யாது.

எனவே உற்பத்தியாளர்கள், முயற்சியாளர்கள் விரைவாக அதனை முன்னெடுக்க வேண்டும். அதற்கு எமது திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சின் முழுமையான உதவிகளும் கிடைக்கும்.

எமது மாவட்டத்தில் இயற்கை உரங்களை தயாரிப்பதற்கான சகல வளங்களும் உள்ளன.

அதனை உற்பத்தி செய்பவர்களே பற்றாக்குறையாக உள்ளது. எனவே இளைஞர்கள், படித்தவர்கள் இதற்கு முன்வரவேண்டும். எமது மாவட்டத்தில் 27 ஆயிரம் மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான இயற்கைஉரம் தேவையாக உள்ளது.

இவற்றை பூர்த்தி செய்வதற்கு அதிகமானவர்கள் முன்வர வேண்டும். இல் லாவிடில் பசளை தட்டுப்பாடு, விளைச்சல் குறைவு போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

எனவே இதற்கான திட்ட முன்மொழிவுகளை கமநல அபிவிருத்தி திணைக்களங்களிற்கு சமர்ப்பித்தால், அதற்குரிய உதவிகள் எங்களால் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

(8-4-299)

## சாக்கு சாமியார் காலமானார்



(மன்னார்)

மன்னாரைச் சேர்ந்த "சாக்கு சாமியார்" என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் கிருஸ்ணன் கடந்த சில வாரங்களுக்கு முன் இந்தியா சென்ற நிலையில் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளதாக இந்தியாவில் உள்ள உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (8-4-285)





கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலைக்கு 30 கட்டில்களும், 30 மெத்தைகளும் Solve அமைப்பால் மாட்ட வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தனிடம் இவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

(படம்:-கிருஸ்ணகுமார்)

## வீதியில் வீசப்படும் கழிவுகளால் வவுனியாவில் சுகாதார சீர்கேடு



(நெளுக்குளம்)

வவுனியா பெரியார்குளம் உள்வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடான நிலை உருவாகியுள்ளதுடன்பொது மக்கள்அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

பூந்தோட்டம் பெரியார்குளத்திலிருந்து தாண்டிக் குளம் செல்லும் உள்வீதி ஓரங்களில் பொதுமக்களால் அதிகப்படியான கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன.

வீட்டுக்கழிவுகள், மலக்கழிவுகள், கோழிக்கழிவுகள் என்பன அப்பகுதிகளில் வீசப்படுவதால் வீதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், அவ் வீதிகளால் அசௌ கரியத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு வீசப்படும் கழிவு கள் ஓடும் நீரினாலும், விலங்குகள், பறவைகளால் காவிச் செல்லப்பட்டு, பரவிகிடக்கின்றன.

இதனால் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளதுடன் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டிகளில் வருகைதரும் ஒரு சில நபர்களே தொடர்ச்சியாக அப்பகுதிகளில் குப்பைகளை வீசி சீர்கேட்டை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தி கழிவு முகாமைத்து வத்தை சரியான முறையில் ஏற்படுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறானசெயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கண் காணிக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர். (8-4-299)

## இளைஞர் வணிகக் கிராமம் திட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்டம் தெரிவு

(அக்கராயன்)

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் எண்ணத்தில், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் நடை முறைப்ப டுத்தப்படவுள்ள இளைஞர் வணிகக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கென முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட இலங்கையின் 3 மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டத்தையும் உள்ளடக்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகள் இதன்மூலம் பலனளித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பொருளாதார செயற்பாடுகளாக இருக்கும் விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றுக்கு முதன்மையளிக்கும் வகையில் இதற்கான காணிகளை, கரைச்சி (விவசாயம்), பூநகரி (மீன்பிடி), பச்சிலைப் பள்ளி (தெங்கு உற்பத்தி) ஆகிய இடங்களில் அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறு மாவட்டச்செயலாளர் ரூபாவதி கேதீஸ்வரனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார். (8-4)

## வெவ்வேறு பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு

### அறுவர் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் ராங்கன் குடியிருப்பு பகுதியில் நேற்று பயணத் தடை அமுல்படுத்தியிருந்த வேளையில் இரவு 2.30 மணியளவில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு உழவு இயந்திரங்களும் அதன் சாரதிகளும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை புளியம் பொக்கணை பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர்களும் அதன் சாரதி இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-4-316)



# இராசிபலன்

21.05.2021
வைகாசி 07, வெள்ளிக்கிழமை
நவமி காலை 6.25 மணிவரை
தசமி பின்னிரவு 4.48 மணிவரை
பூரம் முற்பகல் 10.58 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்** – சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** – வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** – இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள், அடுத்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** – விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**துலாம்** – பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** – உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** – வீண்பழிகள் அகல விரைந்து முடிவுகள் எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது.

**கும்பம்** – குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** – உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**நேர்மையற்ற அமைதியிலும் நேர்மையான போர் மேலானது**

# நாட்டின் நிலைமை மிக மோசம்

# உடனடியாக ஊரடங்கை அமுல்படுத்துங்கள்

## –எதிர்க்கட்சி கோரிக்கை–

**(கொழும்பு)**

**பயணத்தடையை அல்ல ஊரடங்கை உடனடியாக விதிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டில் கொவிட் ஆபத்து தீவிரமாகிவிட்டது. இது தொடர்பாக இலங்கையில் உள்ள பல வேறு மருத்துவ சங்கங்கள் ஜனாதிபதிக்கு கடிதம் சமர்ப்பித்துள்ளன. அந்தக் கடிதங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயங்களை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு அறிவுறுத்துகின்றனர்.

இருப்பினும், இது தொடர்பாக ஜனாதிபதிஇதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. பி.சி.ஆர்.சோதனைகள் எடுப்பதில் காலதாமதமாவதால் மூன்று மடங்கு நோயாளிகள் இருக்கலாம் என்று மருத்துவ சங்கங்கள் கூறுகின்றன. இது மிகவும் கடுமையான நிலைமை.

ஒவ்வொரு நாளும் நோயாளிகளின் எண்ணிக்கையும் இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. கொவிட் மட்டுமல்ல, பிற நோய்களால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

ஒட்சிசன், அவசர படுக்கைகள் உள்ளிட்ட வசதிகள் மருத்துவமனைகளில் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட வேண்டும். தடுப்பூசியை மட்டும் கொடுப்பதன் மூலம் வைரஸைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே கொவிட் தொற்றை கட்டுப்படுத்த தவறிய நாடாக மாறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# தொற்றை தவிர்க்க வேண்டுமானால் வீதிகளை வெறுமையாக்குங்கள்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

(கொழும்பு)

நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களை விட மும்மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவ்வாறானவர்களால் தொற்று அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக அவர் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் மூவாயிரத்திற்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதற்கும் அதிகமான தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும். 3,500 ஐ போல் மும்மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம். அவர்களால் மேலும் நோய் பரவ வழி வகுக்கக் கூடும்.

மக்களை வீட்டில் இருக்குமாறு கோரினால் மக்கள் அவ்வாறு நடந்துகொள்வதில்லை. வீதிகள் வெறுமையடைய வேண்டும்.

ஆகவே, தொற்றை தவிர்க்க வேண்டுமானால் தேவையான விடயங்களுக்கு மாத்திரம் மக்கள் வெளியில் செல்வது நல்லது என அவர் தெரிவித்தார். (நி-4)

# 14 மில்லியன் தடுப்பூசிகள் சீனாவிடம் இருந்து இலங்கைக்கு

(கொழும்பு)

சீனாவிடமிருந்து 14 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசியை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, அதில் ஒரு தொகுதியான 3 இலட்சம் தடுப்பூசிகளை ஒரு மாதத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் அறிவித்துள்ளது.

அத்துடன் சீனாவால் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள 5 மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதெனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலதிக தடுப்பூசிகளை சீனாவிலிருந்து கொள்வனவு செய்வது குறித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் சீனத்தூதுவருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றதாகவும் கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## அதிபுத்திசாலி மன்னரும் அப்பிராணி அமைச்சரும்

ஜோக்கிஸ்தான் நாட்டை குய்யோ முறையோ என்ற மன்னர் ஆண்டு வந்தார். எவரையும் மதிக்க மாட்டார். அவருடைய முட்டாள்தனத்துக்கு அளவே கிடையாது.

அரசவையில் வேலை செய்பவர்களுக்கு, மன்னர் எந்த நேரத்தில் என்ன சொல்வாரோ என்று பதற்றமாகவே இருக்கும்.

மக்களின் நிலைமையோ இன்னும் மோசமாக இருந்தது. அன்று அரசவையில் மன்னர் குய்யோ முறையோ அமைச்சரைப் பார்த்துக் கேட்டார்:

"என்னை இந்த நாட்டில் எல்லோரும் மதிக்கின்றனரா?"

உடனே அவையில் கூடியிருந்த அனைவரும் "ஆம் மன்னா!" என்று ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

முக்கிய அமைச்சர் அப்பிராணியார் முன்னால் வந்து, "மன்னா, உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம்.

காலையில் இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் உங்கள் படத்தை வணங்கிய பிறகே தங்கள் வேலைகளை ஆரம்பிக்கின்றனர்.

உங்கள் பெயரைச் சொன்னால், தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகள்கூட வணக்கம் சொல்கின்றனர். ஆடு, மாடு போன்ற கால் நடைகள்கூடத் தங்கள் பெயரைக் கேட்டால், அவற்றின் மொழியில் வணக்கம் என்று கத்துகின்றன. இவற்றை எல்லாம் கண்காணிக்கவே நாடு முழுக்கப் பல்லாயிரக்கணக்கான படை வீரர்களை நீங்கள் தானே நியமித்துள்ளீர்கள்! இப்போது ஏன் திடீரென்று சந்தேகம், மன்னா?" என்றார்.



உடனே மன்னர், "இல்லை அமைச்சரே, இல்லை" என்று ஆவேசமாகக் கூறினார். என்ன சொல்லப் போகிறாரோ என்று பதறிய அப்பிராணியார், "தாங்கள் சொல்வது புரியவில்லை மன்னா" என்றார். (தொடரும்)

# மகாபாரதம்




இந்துப்பிறவியில் உயிருடன் கூடிய உடம்புக்கு இருக்கும் இளமை, அழகு, முதுமை மீண்டும் மறுபிறப்பிலும் ஏற்படும்.

இப்படி தோன்றுவதும் மறைவதும் உயிர்களின் இயல்பு என்பதை உணர். இதுவே உலக இயற்கை என்ற தெளிவு பெற்றால் இன்ப துன்பங்கள் யாரையும் நெருங்காது. இதை உணர்ந்தவர் எதற்கும் கலங்குவதில்லை.

அருச்சுனா உடல் அழிவுக்கு கலங்காதே. உயிர் அழியாது. தனது புண்ணிய பாவ செயல்களுக்கு ஏற்ப மறுபிறவி அடையும். ஆத்மா கொல்வதும் இல்லை, கொல்லப்படுவதும் இல்லை.

ஆகவே கலங்காது எழுந்து போர் செய், கடமையை நிறைவேற்று. ஆத்மாவிற்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. இது எப்போதோ இல்லாதிருந்து பிறகு திடீரென பிறந்ததன்று. இது என்றும் இறவாதது, என்றும் பிறவாதது. அதாவது உடல் கொல்லப்பட்டாலும் உயிர் கொல்லப் படுவதில்லை.

நைந்து போன ஆடைகளை விடுத்து புது ஆடைகளை உடுத்து வது போல் உயிர் நைந்து போன உடல்களை விட்டுப் பிரிந்து புதிய உடலைப் பெறுகிறது.

எந்த போர்க்கருவியும் உயிரை வெட்டாது. உடலை எரிக்கும் தீ உயிரை எரிப்பதில்லை. வெட்டினாலும், குத்தினாலும் தரதர என இழுத்துப் போனாலும் உயிருக்கு ஒரு துன்பமும் இல்லை.

ஆகவே மாளப் போகிறவர்களுக்காக நீ ஏன் அழுகிறாய்? அவர்கள் வினைப் பயனை அவர்கள் விதிப்படி அடைவர்.

பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் இயல்பு. அதற்காக ஏன் வருத்தம். இவ்வுலக நியதியை யாராலும் மாற்ற இயலாது. ஆகவே நீ உன் கடமையை ஆற்று.

இந்த ஆன்மாவின் செயல் விந்தையானது தான். எனினும் மாற்ற முடியாத தன்மையுடையது.

எல்லோர் உடம்பிலும் உள்ள ஆத்மாவை யாராலும் கொல்ல முடியாது. ஆகவே நீ யாருக்கும் வருந்த வேண்டாம். தவிர்க்க இயலா போர் வந்து விட்டது. வீரர்களை வரவேற்க சொர்க்கவாசல் தயாராய் விட்டது.

(தொடரும்)

# தடுப்பூசியின் 3 ஆவது டோஸ் மூலம் அதிகரிக்கும் நோய் எதிர்ப்புசக்தி

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வு தகவல்

**(லண்டன்)**

**அஸ்ட்ரா ஜெனெகாவின் 3 ஆவது டோஸ் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**




ஒருவருக்கு இந்த தடுப் புசி, 2 டோஸ்கள் போட வேண்டிய நிலையில், இதன் 3 ஆவது டோஸ் மூலம் என்னவித மாற்றங்கள் நிகழும்? என்பதை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஆய்வு செய்தது.

இதில் ஆச்சரியமான முடிவுகள் கண்டறியப்பட்டு உள்ளன.

குறிப்பாக 3ஆவது டோஸ் போடப்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இன்னும் வலிமையாகி இருப்பதுடன், கொரோனாவின் எத்த கையை மாறுபாட்டையும் எதிர்கொள்ளும் வலிமை பெற்றிருப்பது கண்டறியப்பட்டது.

இதைத்தவிர ஒருவருக்கு நோய் எதிர்ப்பு சக்திகுறையும் நேரத்தில் இந்த தடுப்பூ சியை ஒரு நோயெதிர்ப்பு உந்து சக்திக்கான ஆயுதமாக பயன்படுத்தலாம் என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இது புதிய வைரஸ் திரிபுகளை எதிர்கொள்ள பெருதவியாக இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தடுப்பூசியின் 3ஆவது டோஸ் மக்களின் நோயெதிர்ப்பு சக்தியை பாதிக்கும் என பலரும் நம்பி வந்த நிலையில், இந்த ஆய்வு முடிவுகள் சற்றே ஆச்சரியமளிக்கும் வகையில் இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். (8-4)

# நோக்கம் நிறைவேறும் வரை தொடர் தாக்குதலுக்கு உறுதி

## இஸ்ரேல் அதிரடி தகவல்



(ஜெருசலேம்)

இஸ்ரேலிய போர் விமானங்கள் காசா பகுதிகளில் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் வரையில் காசா பகுதியில் 227 பேர் மரணித்ததாக தெரி விக்கப்படுகின்றது.

இவ்வாறு மரணித்தவர்களில் 64 சிறுவர்களும் 38 பெண்களும் அடங்குவதாக காசாவிலுள்ள சுகாதார தரப்பு அறிவித்துள்ளது.

வன்முறை அதிகரித்துள்ள நிலையில் 10 ஆவது நாளில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் இந்த விடயம் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் கலந்துரையாடியுள்ளார்.

போர் நிறுத்தத்திற்கான பாதை குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை தாம் எதிர்பார்ப்பதாகவும் ஜோ பிடன் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த கலந்துரையாடலில் தொடர்ந்து கருத்துரைத்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நோக்கம் நிறைவேறும் வரையில் காசா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதில் உறுதியாக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் லெபனான் பகுதியிலிருந்து 4 ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதற்கு பதிலளித்து தாக்குதல் நடத்தப்படுவதாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது. (4-8)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :-3 435 787

தொற்று :-165 714 665

(நேற்றைய நிலவரம்)

# பிரித்தானிய பெருநகரங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



(லண்டன்)

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் நாளான மே.18 ஆம் திகதி தமிழ் மக்களின் துயரங்களை வெளிப்படுத்தும் வகையில் லண்டன் பெருநகரங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

பிரித்தானிய தமிழர்கள் உள்ளூராட்சி மன்றங்கள், ஆயலங்களின் அனுசரணையுடன் பிரித்தானிய தலைநகர் முழுவதும் 1,000 கோப்பை கஞ்சிகள் தன்னார்வலர்களால் விநியோகிக்கப்பட்டன.

இந்தக் கஞ்சிக் கோப்பையில் www.RememberMay2009.com என்ற இணையத்தளத்தில் தரவேற்றப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் அவலங்களை விளக்கும் புகைப்படங்களை காணும் வகையில் QR குறியீடு பதிக்கப்பட்டிருந்தது. (8-4)

# விதிகளை தளர்த்தி 500 பேர் மருத்துவ பணியில்

(சென்னை)

வெளிநாட்டில் மருத்துவம் படித்தவர்கள் பயிற்சியின்போது ரூ.5 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டும். அவர்கள் தமிழகத்தில் பயிற்சி பெறும் வரையில் ஓராண்டு பணிபுரிந்த பின்பே மருத்துவ பணி தொடர வேண்டும் என்ற விதி இருந்தது.

இந்த நிலையில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் மருத்துவர்கள் தேவை காரணமாக இந்த 2 விதிகளையும் தளர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தற்போது வெளிநாட்டில் மருத்துவம் படித்து காத்திருக்கும் 500 பேரும் உடனடியாக மருத்துவ பணியை தொடங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-4)

# 14 நாட்களுக்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும்

## கொழும்பு மருத்துவ பீடம்

(கொழும்பு)

**நாட்டில் 14 நாட்களுக்கு கடுமையான நடமாட்டத் தடை விதிக்கப்பட வேண்டும் என கொழும்பு மருத்துவ பீடத்தின் சமூக வைத்திய திணைக்களத்தின் பேராசிரியர் மனுஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொவிட்-19 தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

இதனை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பில் வைத்திய நிபுணர்கள் அரசாங்கத்திற்கு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# பரீட்சைகளை ஒத்திவைக்கும் தீர்மானமில்லை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை மீண்டும் பிற் போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த தகவல் தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்விஅமைச்சு அறிவித்துள்ளது. (நி-4)

# சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் தாமதிக்காது மருத்துவமனை செல்லவும்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவுறுத்து



(கொழும்பு)

நாட்டில் 55 வயதுக்கு மேற்பட்டோருக்கு சுவாசிப்பதில் சிரமம் போன்ற கொரோனா அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதிஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறில்லையெனின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தொற்றுக்குள்ளான பெற்றோரை நடு வீதியில் விட்டுச் சென்ற பிள்ளைகள்

(கொழும்பு)

கடந்த 3 நாட்களுக்கு முன்னர் வெல்லம்பிட்டிய சந்தியில் வயோதிப பெற்றோரை நடு வீதியில் விட்டுச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் இருவரையும் பிள்ளைகள் அவ்விடத்தில் விட்டுச் செல்லப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடை ஒன்றின் முன்னால் விழுந்து கிடந்த இந்த இருவரையும் சுகாதார அதிகாரிகள்பிசிஆர். பரிசோதனைக்குட்படுத்தினர்.

அதில் அவர்கள் இருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளது தெரிய வந்தது.

கொரோனாத் தொற்றியமையினாலேயே பிள்ளைகள் வீதிகளில் விட்டு சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. அவர்கள் இருவரும் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரையும் ஐடிஎச் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல கொத்தட்டுவ சுகாதார வைத்தியசாலை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த தம்பதியருக்கு கடந்த நாட்களாக அருகில் இருந்தவர்களே உணவு வழங்கி அவர்களை சுத்தப்படுத்தியுள்ளனர். சுத்தப்படுத்தியவர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை,பிள்ளைகளின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் அந்த பெற்றோர் பிள்ளைகள் தொடர்பான தகவல்களை வெளியிட விரும்பவில்லைஎனதெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மன்னிக்க வேண்டும்!

ஒரு ஊரிலே ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு நாள் தன்னுடைய அரசாங்க கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

வரவு எவ்வளவு–செலவு எவ்வளவு– அப்படி என்பதைப் பற்றியெல்லாம் அதிகாரிகள் விபரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அரசாங்கத்திடம் கடன் வாங்கி அதை இன்னும் திருப்பிக் கட்டாதவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று விசாரித்துக் கொண்டிருந்தார்.

அந்தச்சமயத்தில் ஒரு ஆளை அரசாங்க ஊழியர்கள் அழைத்துக் கொண்டு வந்தார்கள். இந்த ஆள் பத்தாயிரம் ரூபாய் அரசாங்கத்திற்கு கடன்பட்டிருக்கின்றார் என்றார்கள்.

ஐயா இப்பொழுது என்னுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கின்றேன் என்றான் அந்த ஆள்.

மன்னர் பார்த்தார்...அப்படி என்றால் இவனையும் இவனுடைய நிலங்களையும் இவனுடைய வீடு வாசலையும் இன்னும் என்ன இருக்கோ அவ்வளவையும் விற்று அரசாங்கப் பணத்தை ஈடு கட்டுங்கள் என்று உத்தரவு போட்டுவிட்டார்.

உடனே அந்த ஆள் பொத்தென்று காலிலே விழுந்தான். ஐயா... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். கூடிய சீக்கிரம் எப்படியாவது என்னுடைய கடனைத் தீர்த்து விடுகின்றேன் என்றான்.

மன்னிப்பு என்று கேட்டுவிட்டான் இல்லையா? அதனால் உடனே மன்னர் மனது மாறிப் போய்விட்டது. அவனை விடுதலை செய்து விட்டார். அவனுடைய கடன் தொகையையும் தள்ளுபடி செய்தார். போய் வா என்று சொல்லிவிட்டார். அவ்வளவு தான்.

இவன் ஆனந்தமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் வீட்டிலே வேலை செய்கின்ற ஒருத்தன் இவனிடம் கடன்பட்டிருந்தான். அவன் இவனுக்கு ஆயிரம் ரூபாய் தர வேண்டியிருந்தது.

எப்பொழுது தரப் போகின்றாய் என்று கேட்டான். அவன் விழித்தான். இவன் அவன் கழுத்தைப் பிடித்து நெரிக்க ஆரம்பித்தான். அவன் கத்தினான். காலில் விழுந்தான்.

என்னை மன்னித்து விடுங்கள் எப்படியாவது கடனைத் திருப்பித் தந்து விடுகின்றேன் என்றான்.

அவன் இரக்கப்படவே இல்லை. நீதிமன்றுக்குப் போனான். இவனுக்குச் சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டான். கொஞ்ச நாளில் இந்த விடயம் மெதுவாக மன்னருடைய காதுகளுக்கு எட்டியது. சிறையில் இருந்தவனின் நண்பர்கள் சிலபேர் இதை மன்னரிடம் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வளவுதான்.

உடனே அந்த ஆளைக் கூப்பிட்டார். இதோ பாரப்பா நீ என்னிடம் கடன்பட்டிருந்தாய். மன்னிப்புக் கேட்டாய்... கொடுத்தேன். ஆனால் நீ உன்னிடம் கடன்பட்டு இருந்தவன் மன்னிப்புக் கேட்டும் மன்னிக்க மறுத்து விட்டாய்.

நான் உன்னுடைய கடனை தள்ளுபடி செய்தேன். நீ அவனை சிறையில் தள்ளியிருக்கின்றாய். நான் உன்னிடம் இரக்கம் காட்டியது போல் நீயும் உன்னுடைய வேலையாளுக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் இல்லையா? நீ இரக்கம் காட்டவில்லை. அதனால் உன் கடன் தீரும் வரை உன்னையும் சிறையில் அடைக்க உத்தரவிடுகின்றேன் என்றார்.

இவனையும் சிறையில் கொண்டு போய் தள்ளி கதவைச் சாத்தி விட்டார்கள். இதிலேயிருந்து என்ன தெரிகின்றது? மன்னிப்பை விரும்புகின்றவர்கள் மன்னிக்கிறதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

எனக்கு எதிராகப் பாவம் செய்கின்றவர்களை நான் எத்தனை தடவை மன்னிக்கலாம்? என்று இயேசுவின் சீடர்களில் ஒருவரான இராயப்பர் கேட்கின்றார். இதற்கு இயேசு சொல்கின்றார்...

எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிக்கலாம். இந்த மனோபாவம் மனிதனை மனிதனாக்கும். மனித குலத்தை மேம்படுத்தும்.

இந்தக் காலத்தில் உள்ளவர்கள் இதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தப்பா புரிந்து தடுமாறக் கூடாது.


எத்தனை தடவை வேண்டும் என்றாலும் என்னை மன்னிக்கிறதற்குத் தயாராக இருக்கின்றீர்களா அப்பா? என்று கேட்டான் ஒரு பையன். தயாராக இருக்கின்றேன் என்றார் அப்பா. அப்படி என்றால் மூன்றாவது தடவையாக உங்களிடம் ஒரு மன்னிப்புக் கேட்கின்றேன் என்றான். என்னடா விடயம்? என்றார். இந்தத் தடவையும் நான் கணக்கிலே பெயில் என்றான் பையன்.

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2021-14.06.2021

ஜோதிடக் கலாமணி
சிவஸ்ரீ சிங்காரம்

## பொருளாதார நிலை உயரும்



### தனுசு இராசிவாசகர்களே!

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். பொருளாதார நிலை உயரும்.

#### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் புதியவர்களை நம்பி செயற்பட இயலாது. வருங்காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும். 'நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது.

#### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

உங்கள் இராசிக்கு 5, 12 இற்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் சனி பகவானைப் பார்ப்பதால் நிறையப் பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். கண், காது சம்பந்தப்பட்ட வகையில் தொல்லைகள் ஏற்படும். பிள்ளைகளாலும் பிரச்சினை, பிறருக்குப் பொறுப்பு சொல்வதன் மூலமும் பிரச்சினைகள் ஏற்படும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலமும், ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலமும் ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ள இயலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வழக்குகள் சாதகமாக அமையும்.

#### புத-சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அதே நேரத்தில் 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். இந்த இரண்டு கிரகங்களும் 6 ஆம் இடத்தில் ஒன்றுகூடுவதால் நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்க நேரிடும். உத்தியோகத்தில் உயர் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பும் உண்டு. வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் நன்மை தரும் விதம் அமையும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களின் ஆதரவோடு எதிர்காலத்தை இனிமையாக்கிக் கொள்ள முயற்சி செய்வீர்கள்.




#### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார். இதன் விளைவாக இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். வெளிமாநிலங்களிலிருந்து உத்தியோகத்திற்கான அழைப்பு வரலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

#### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். 12 ஆம் இடத்திற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம் தான். இருப்பினும் அவர் சப்தம பார்வையாக சனியைப் பார்ப்பதால் கொடுக்கல்-வாங்கல்களில் விரயங்கள் ஏற்படும். கூடுதல் கவனம் செலுத்தினாலும் தொழிலில் இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

#### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் குடும்பத்தில் சுபகாரியங்கள் உண்டாவதற்கான அறிகுறிகள் தென்படும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியக் குறைபாடுகள் அகல ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றங்கள் உண்டு. வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும்.

## மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்



### மகர இராசிவாசகர்களே!

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். அவரை 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் பார்க்கின்றார். எனவே எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. மேலும் மருத்துவச் செலவும் அதிகரிக்கும்.

#### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். எனவே ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். குடும்பப் பிரச்சினை ஓவ்வொன்றாகத் தலைதூக்கும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் பற்றி சிந்திப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வீண் பழிகளும், விரயங்களும் ஏற்படும்.

#### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

உங்கள் இராசிநாதன் சனியை 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் பார்க்கின்றார். மாதத் தொடக்கத்திலேயே இந்த அமைப்பு இருக்கின்றது. செவ்வாய், சனி ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று பகைக் கிரகம் என்பதால் அவைகளின் பார்வை பலத்தால் எதிர்பாராத திருப்பங்கள் ஏராளமாக நடைபெறும். குறிப்பாக நட்பு பகையாகலாம். நம்பிக்கைக்குரியவர்கள் உங்களை விட்டு விலகலாம். உடன்பிறப்புகளின் வழியில் நடைபெற இருந்த சுபநிகழ்வில் தாமதங்கள் உருவாகும்.

#### புத-சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவரோடு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே புத சுக்கிர யோகமும் உருவாகின்றது. சூரியனும் இணைந்திருப்பதால் புத ஆதித்ய யோகமும் ஏற்படுகின்றது. எனவே பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல் வந்து சேரும். அவர்களின் பட்ட மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட காரியங்களில் இருந்த குறுக்கீடுகள் அகலும். தெய்வத் திருப்பணிகளுக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு வரும்.




#### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்திப் பார்ப்பீர்கள்.

பெண்களின் சுபச்சடங்குகள், மணவிழா, மணிவிழா போன்றவை நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். சங்கிலித் தொடர்போல வந்த கடன்சுமை பாதிக்க மேல் குறையும்.

#### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். எனவே ஆரோக்கியப் பாதிப்புகள் அதிகரிக்கலாம். வாங்கிய கடனுக்காக சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகலாம். செவ்வாய், சனி பார்வை இக்காலத்தில் தொடர்வதால் கொடுக்கல்-வாங்கல்களிலும் ஒருசிலருக்கு ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

#### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும் மாதமாகவே கருதலாம். வீடு மாற்றங்கள் மட்டுமல்லாமல் உத்தியோக மாற்றங்களும் கூட உருவாகலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு கிடைக்கும்.

எதையும் அனுபவஸ்தர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யுங்கள். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2021-14.06.2021



கும்ப இராசிவாசகர்களே

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனிபகவான் விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக் கின்றார். ஏழைரச்சனி தொடங்கிவிட்டது என்பதால் எதிலும் கூடுதல் விழிப்பு ணர்ச்சி தேவை. பொருளாதாரப் பற்றாக் குறை ஏற்படும். உறவினர்கள் பகை உருவாகும்.

### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிநாதனாகவும், விரயாதி பதியாகவும் விளங்குபவர் சனிபகவான். அவர் மாதத் தொடக்கத்தில் இருந்தே வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். அது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். இல்லத்தில் திடீர் திடீரென மின்சாதனக் கருவிகள் மற்றும் வாகனங்கள் பழுதாகி செலவை ஏற்படுத்தும். பொதுவாக இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதைச் செய்தாலும் கொஞ்சம் யோசித்துச் செய்ய வேண்டும்.

### செவ்வாய்-சனிபார்வைக் காலம்

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பஞ்சம ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு விரய ஸ்தானத்திலுள்ள சனியைப் பார்க் கின்றார். எனவே சகோதர வர்க்கத்தி னரால் விரயங்கள் ஏற்படும். 'கட்டம் கட்டி வாடகைக்கு விடமுடியவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது அது கைகூடும். பிள்ளைகள் வழியிலும் சிறுசிறு விரயங்கள் உண்டு.

### புத-சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் புதன். 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். இந்த இரண்டு கிரகங்களும் மாதத் தொடக்கத்தில் சுக ஸ்தானத்தில் ஒன்றுகூடிச் சஞ்சரிக்கின்றன. புத சுக்கிர யோகமும் புத ஆதித்ய யோகமும் செயற் படும் இந்த நேரத்தில் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டி வரும் செய்தி மகிழ்ச்சிக்குரியதாக அமையும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்க ளுக்கு புதிய பொறுப்புகள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும்.

வசதி வாய்ப்புகள் பெருகும். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வரலாம்.




### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள செவ் வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகின்றார்.

இதன் விளைவாக உடன்பிறப்பு களுக்கு திருமண யோகம் வந்து சேரும். உயர் அதிகாரிகளின் பழக்கத்தால் சில நல்ல காரியங்களை செய்து முடிப்பீர்கள். பொருளாதார நிலை உயரும். பிள்ளை களின் வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிட்டும்.

### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுவதால் சகோதர வர்க்கத் தினருடன் பிரச்சினைகள் ஏற்படும். தொழில் பங்குதாரர்கள் திடீரென விலகு வர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்காது.

வேலைப்பளு கூடும். திடீரென நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைத்து மனக் கலக்கத்தை உருவாக்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் நவக்கிரகத்தில் உள்ள குருவை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் யோசித்துச் செய்வது நல்லது. இடமாற்றங்கள், எதிர்பாராத விதத்தில் வரலாம்.

கணவன்-மனைவிக்குள் அனுசரித் துச் செல்வது அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய் மற்றும் உடன் பிறப்புகள் உதவிகள் கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலையில் சேர வாய்ப்பு கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சியும் சிலருக்கு கைகூடும்.

# உறவினர்கள் பகை உருவாகும்

ஜோதி ஸ்ரீ கலாமணி
சிவஸ்ரீ சிங்காரம்



மீன இராசிவாசகர்களே

பிலவ வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் விரய ஸ்தா னத்தில் சஞ்சரிக்கின்றார். அதேநேரத் தில் லாபாதிபதி சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே விரயத்திற் கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், சனி பகவானைப் பார்ப்பதால் ஆரோக் கியத் தொல்லைகள் அதிகரிக்கும்.

### சனியின் வக்கிர இயக்கம்

உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் சனி. லாபா திபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்கும் சனி வக்கிரம் பெறும்பொழுது நன்மையும் தீமையும் கலந்தே நடை பெறும். இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் என்ற விதத்தில் ஏதேனும் ஒரு மாற்றம் உண்டு. ஆயினும் மாறிச்சென்ற இடம் திருப்தியில்லாமல் மீண்டும் பழைய இடத்திற்கே வரக்கூடிய சூழ்நிலையும் உருவாகலாம். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்தாலும் ஏற்றுக்கொள்ள இயலாது.

### செவ்வாய்-சனிபார்வைக் காலம்

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் செவ்வாய். லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. இவை இரண்டும் ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளும் விதத்தில் இம்மாதக் கிரக நிலை இருக் கின்றது.

எனவே இடம், பூமியால் பிரச்சி னைகள் ஏற்படலாம். கடன் சுமையின் காரணமாக வாங்கிய இடத்தை விற்க நேரிடலாம். 'ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினாலும் ஆரோக்கியத்தில் தொல்லை ஏற்படுகின்றதே' என்று கவ லைப்படுவீர்கள்.

### புத- சுக்கிர யோகம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அதே நேரத்தில் 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இந்த இரண்டு கிரகங்களும் ஒன்று சேர்ந்து சஞ்சரிப்பது யோகம் தான். அதிலும் சகாய ஸ்தா னத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பாராத நன் மைகள் கிடைக்கும். அரசுப் பணிக்கு முயற்சி செய்தவர்க ளுக்கு அது கிடைக் கலாம்.

### மிதுன-சுக்கிரன் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள செவ் வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோக




த்தை உருவாக்குகின்றார். இதன் விளை வாக உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னி ன்று நடத்துவீர்கள்.

புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பெண் பிள்ளைகளின் திரும ணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட் களை வாங்கிச்சேர்ப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்பொழுது கிடைக்கலாம்.

### கடக-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 3 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். இதன் விளைவாக பொருளாதாரத்தில் பற்றாக்குறை அதிக ரிக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் மேலோங்கும்.

குடியிருக்கும் வீட்டாலும் பிரச்சி னைகள் வரலாம். புதியவர்களை நம்பி எதையும் செய்ய இயலாது. இக்கால த்திலும் செவ்வாய்-சனி பார்வை தொடர் வதால் சொத்துப் பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும்.

இம்மாதம் வியாழன் தோறும் குரு பகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற் படாது. கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் கைகூடாமல் போகலாம்.

கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாயின் உடல் நலம் சீராகும். உடன்பிறப்புகள் உதவி செய்வர்.

பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பா ர்த்த இலாகா மாற்றம் வந்து சேரும். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை.

# ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும்

(முற்றும்)

# 500 கோடி ரூபாய் நட்டஈடு கோரி றிசாத், றியாஜ் நீதிமன்றில் மனு





(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன், அவரது சகோதரர் றியாஜ் பதியுதீன் ஆகியோர் தம்மை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்து சி.ஐ.டியினர் தடுத்து வைத்துள்ளதை ஆட்சேபித்து தலா 500 கோடி ரூபாய் நட்டஈடு பெற்றுத் தரக் கோரி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

அரசியலமைப்பின் 17 மற்றும் 126 ஆவது உறுப்புரைக்கு அமைய, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக அவர்கள் இவ்வாறு தனித் தனியாக அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நேற்று முன்தினமும் கடந்த செவ்வாய்க்கிழமையும் தாக்கல் செய்துள்ளனர். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



## விரதங்கள்

## செல்வ வளம் தரும் வெள்ளிக்கிழமை விரதம்

விரதங்கள் தனி மனிதனின் உள்ளத்தைத் தூய்மையாக்கி வாழ்வை மேம்படுத்துகின்றன. தமக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்தல், பிறர் சீண்டினாலும் கோபம் கொள்ளாமல் இருத்தல், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமை என விரதத்தின் தன்மை குறித்து வேத நூல்கள் கூறுகின்றன.

ராமநவமி, வைகுண்ட ஏகாதசி, தை அமாவாசை, துர்க்காஷ்டமி, விஜயதசமி, கோகுலாஷ்டமி, கந்தசஷ்டி, நாக சதுர்த்தி, மகாளய அமாவாசை, பௌர்ணமி, ஆடிக் கிருத்திகை, மாசி மகம், பங்குனி உத்திரம், வரலட்சுமி விரதம், கிருஷ்ண ஜெயந்தி, வைகாசி விசாகம், பரணி தீபம், கார்த்திகை தீபம் போன்றவை நட்சத்திரங்களை முன்னிட்டு கொண்டாடப்படும்.

இவை தவிர வார விரதமும் அனுஷ்டிக்கப்படுகிறது. அவற்றில் சுக்ரவாரம் எனும் வெள்ளிக்கிழமை விரதம் பிரசித்தி பெற்றது. எல்லா வெள்ளிக்கிழமைகளும் முருகனுக்குரிய விரத நாட்களாகும்.

எனினும் ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் மகிமை வாய்ந்தவை என சைவ நூல்கள் கூறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் ஆலய தரிசனம் செய்து கடவுள் சிந்தனையோடு இருந்தால் இந்தப் பிறவியில் சகல விதச் செல்வங்களும் பெற்று முக்தி நிலையை அடையலாம்.

வீடு, வாகனம், ஆடைகள் உள்ளிட்ட அனைத்துச் செல்வங்களையும் வாரி வழங்குபவர் அசுர குருவான சுக்கிரன் ஆவார். அதனால் வெள்ளிக்கிழமை வழிபாடு விசேடம்.

ரிஷபம், துலாம் ஆகிய இராசிகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் பிறந்தவர்கள் சுக்கிரனுடைய அருளைப் பெற்றவர்கள். சுக்கிரன் வெண்மையான நிறம் உடையவர்.

அதனால் இவருக்கு சுக்கிரன் என்றும் வெள்ளி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

திருமால் வாமனவதாரம் எடுத்தபோது மகாபலி சக்கரவர்த்தியிடம் சென்று மூன்றடி மண் கேட்டார். அசுர குருவான சுக்கிராச்சாரியார் அதைக் கொடுக்க விடாமல் மன்னனைத் தடுத்தார்.

ஆனால் மகாபலி "யாசகம் கேட்டு வந்தவர்களிடம் அவர் கேட்பதைக் கொடுப்பது என் கடமை. அதை யார் தடுக்க நினைத்தாலும் சம்மதிக்க மாட்டேன்" என்று கூறி நீர்வார்த்துக் கொடுக்கத் தயாரானார்.

அப்போது சுக்கிரன் வண்டாக உருவெடுத்து நீர் வார்க்கும் கொண்டியின் மூக்கினுள் புகுந்து நீர் வராமல் அடைத்துக் கொண்டார். அதைக்கண்ட வாமனர் ஒரு தர்ப்பைப் புல்லினால் கொண்டியின் மூக்கினுள் குத்தினார். அது சுக்கிரனின் ஒரு கண்ணில் பட்டு அவரது கண் பார்வை பறிபோனது.

சுக்கிர பகவான் அழகானவர். கலா ரசிகரான இவர் சகலகலா வல்லவர். அசுர குருவாக விளங்கும் அவர் சுக்கிரநீதி என்ற நீதி சாஸ்திரத்தை எழுதியவர். இவர் தன்னை வழிபடுபவர்களுக்கு நன்மதிப்பையும் அதிர்ஷ்டத்தையும் சுகபோகத்தையும் அளிப்பவர்.

வெள்ளிக்கிழமை விரதம் பராசக்திக்கும் உகந்தது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று விரதம் இருந்து உமாதேவியை வழிபட்டால் அவரது அருளைப் பெறலாம்.

அரக்கர்கள் தேவர்களைத் துன்பப்படுத்தும் போதெல்லாம் தேவர்கள் அம்பிகையை வணங்கி நிற்பர். அப்போது அன்னை அவர்கள் முன் தோன்றி அபயம் அளித்து அரக்கர்களிடம் இருந்து தேவர்களைக் காத்து ரட்சிப்பர். அதை முன்னிட்டு அம்பாளைத் தொழும் விரதம் சுக்கிர வார விரதம் எனப்படுகிறது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## துல்ஹிரிய தொழிற்சாலையில் 398 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட துல்ஹிரிய பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் ஊழியர்களில் 398 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த தொழிற்சாலையின் சிற்றுண்டிச்சாலையில் பணியாற்றிய ஊழியர் ஒருவருக்கு வைரஸ் தொற்று உறுதியான நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். இதனால் குறித்த தொழிற்சாலையைத் தற்காலிகமாக மூடுவதற்கு சுகாதாரத் தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கம்பஹா மாவட்டத்தில் ஒருநாளில் மட்டும் 761 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் பதிவான 3 ஆயிரத்து 623 கொரோனா நோயாளர்களில் அதிகமானவர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, அங்கு 761 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இதுதவிர, கொழும்பு, குருநாகல், காலி, யாழ்ப்பாணம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் 200 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என கொரோனா வைரஸைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

## சுகாதார விதிமுறைகளை மீறிய மேலும் 493 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 493 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 120 |
| தக்காளி | 280 | 350 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 160 | 140 | 140 | 150 |
| கரட் | 150 | 200 | 200 | 200 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 |
| புடோல் | 120 | 140 | 80 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 130 | 140 | 160 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 120 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 140 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 850 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 400 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 35 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 220 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 250 |
| வெங்காயப்பூ | - | -- | -- | -- |
| முள்ளங்கி | 120 | 140 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 50 | -- |

# புதிய ஆயுதத்துடன் தயாரான இஸ்ரேல்!

இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளைப் போர் மேகம் சூழ்ந்திருக்கிறது. இரு நாடுகளுக்கிடையேயான மோதல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து கொண்டே இருக்கிறது. இதில் இஸ்ரேலின் போர்த் தொழில்நுட்பம் ஒன்று உலக கவனத்தைப் பெற்று வருகிறது. இதை "அயர்ன் டோம்" (Iron Dome) என்று அழைக்கிறது இஸ்ரேல்.

தற்போது நடந்து கொண்டிருக்கும் போரில் தினமும் இஸ்ரேலை நோக்கி பல நூறு ரொக்கெட்டுகள்/ ஏவுகணைகள் இஸ்ரேலின் மக்கள் தொகை அதிகம் இருக்கும் நகரங்களை நோக்கி ஏவப்படுகின்றன. ஆனால், இதில் இஸ்ரேல் பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்துவது வெகு சில தான். காஸாவிலிருந்து ஏவப்படும் ரொக்கெட்டுகள்/ ஏவுகணைகள் அனைத்தையும் வானிலேயே துவம்சம் செய்து விடுகிறது "அயர்ன் டோம்" அமைப்பு.

இஸ்ரேலைக் குறிவைத்துத் தாக்க வரும் ரொக்கெட்டுகளைக் கண்டுபிடிப்பதற்காக அதிநவீன ரேடார் அயர்ன் டோமில் உண்டு. வரும் ரொக்கெட்டுகளை ரேடார்கள் கண்டறிந்ததும் அதை அழிக்க இரண்டு இடைமறிப்பு ஏவுகணைகளை ஏவும் இந்த அமைப்பு. இது மட்டுமல்ல, வரும் ஏவுகணைகள் மற்றும் ரொக்கெட்டுகளில் எது மக்கள் வாழும் பகுதிகளைத் தாக்க வருகிறது என்பதைப் பிரித்



தறிந்து அதை மட்டும் தாக்கும் திறன் அயர்ன் டோமுக்கு உண்டு. தேவையில்லாமல் ஏவுகணைகள் வீணாவதை இது குறைக்கும்.

இரவு, பகல் என எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்த வானிலையிலும் இது இயங்கவல்லது. பெயருக்கு ஏற்றாற்போல் கண்ணுக்குத் தெரியாத ஒரு இரும்புக்கேடயத்தை இது உருவாக்குகிறது. இந்தப் போரில் பேரளவு உயிர்ச் சேதங்களைத் தவிர்த்திருக்கிறது அயர்ன் டோம். நம்மூர் தீபாவளி வானம் போல வானில் ரொக்கெட்டுகளை இடைமறித்து அவற்றை அயர்ன் டோம் அழிக்கும் காட்சிகள் இன்று இஸ்ரேலில் சர்வசாதாரண ஒன்றாகவே மாறிவிட்டன.

அதற்காகக் குறைகளே இல்லை என்றில்லை. இன்னும் 90%தான் ரொக்கெட்டுகளைத் தடுக்கிறது அயர்ன் டோம். இன்னும் பலம் பொருந்திய நாட்டின் தாக்குதல்களை சமாளிக்குமா? என்பது கேள்விக் குறிதான் என்கிறார்கள்.

இந்த அதிநவீனப் போர் இயந்திரம் அவ்வளவு எளிதில் தயாராகிவிடவில்லை. இந்த ரக தளபாடத்தை மேம்படுத்த இஸ்ரேலுக்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டன. 2006 இல் தெற்கு லெபனானில் செயற்படும் ஹெஸ்புல்லா என்கிற அமைப்புடன் இஸ்ரேலுக்கு மோதல் ஏற்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான ரொக்கெட்டுகளை சரமாரியாக ஏவியது அந்த அமைப்பு.

இதனால் பெரும் சேதத்தைச் சந்தித்தது இஸ்ரேல். தாக்குதலில் மக்கள் பலரும் பலியாகினர். இதன் விளைவாக ரொக்கெட்டுகளிலிருந்தும், ஏவுகணைகளிலிருந்தும் தற்காத்துக்கொள்ள அதிநவீனப் பாதுகாப்பு அரண் ஒன்று அமைக்கப்படும் என்றது இஸ்ரேல். அதன்பின் இஸ்ரேலின் அட்வான்ஸ்டு டிஃபென்ஸ் சிஸ்டம்ஸ், இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இன்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்கள் சேர்ந்து தயார் செய்ததுதான் இந்த அயர்ன் டோம்.

இந்தத் திட்டத்திற்காக அமெரிக்காவிடமிருந்து 200 மில்லியன் டொலர் நிதியைப் பெற்றது. பலவித ஆராய்ச்சிகளுக்கும் சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டு 2011 இல் செயற்பாட்டுக்கு வந்தது முதல் அயர்ன் டோம் அமைப்பு.

இப்படியான ஒரு பலம் பொருந்திய அமைப்பு தன்னிடம் இருக்கிறது என்பதால்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மறுக்கிறது இஸ்ரேல் என்பதுதான் அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது.

வெறுமனே போர்த் தொழில்நுட்பத்தைப் புகழ்வதால் எந்தப் பயனுமில்லை. போர் இல்லாத உலகம் தான் நாகரிகமான உலகம். அதுவும் உலகமே ஒரு பெருந்தொற்றைச் சந்தித்துத் துயரத்தில் மூழ்கியிருக்கும் வேளையில் எந்த வடிவிலான போரும் என்ன புதிய தொழில்நுட்ப ஆயுதமும் மானுடத்தின் அவமானச் சின்னமே.




**சிவரதி**




**தயாழினி**




**குறிஞ்சிநிலா**




**றனுஜன்**




**ஆதித்தன்**




**அர்ச்சுன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

*கஷ்டங்களுக்கு இடையே வரும் இடைவெளி கலைத்தான் நாம் மகிழ்ச்சி என்று அழைக்கிறோம்.* – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவலம் நிறைந்த காலம் இது எவர் மனதையும் நோகடிக்காதீர்கள்

கொரோனாத் தொற்றினால் இயல்பு வாழ்க்கை குழம்பிக் கிடக்கிறது.

அதிலும் கொரோனாக் காலத்தில் இறப்பவர்களின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு உறவினர்கள் படும் பாட்டைப் பார்க்கும் போது மனம் பதட்டமடைகிறது.

அதிலும் கொரோனாவால் இறப்பு ஏற்பட்டது என்றால், அவ்வளவுதான். பெற்ற பிள்ளைகள்கூட அருகில் நிற்க முடியாத அளவில் நிலைமை வந்துவிடுகின்றது.

என்ன செய்வது நோயில் இப்படியொரு நோய். இறப்பில் இப்படியொரு இறப்பு என்று காலத்தை நோகின்ற அளவிலேயே மனித குலத்தின் விதி எழுதப்பட்டிருக்கிறது.

இவையொரு புறமிருக்க, கொரோனாக் காலத்தில் ஒட்டுமொத்த மருத்துவ சேவைகளும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதனால் மருத்துவத் துறையை நோக்கிய பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்னெழுந்துள்ளன.

மேற்போந்த நிலைமை இன்னும் மோசமடையுமாயின், மருத்துவ சேவையுடன் பொதுமக்கள் முரண்படுகின்ற சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இங்குதான் அனைத்துத் தரப்புகளும் நிதானத்துடனும் அன்பு, பாசம், இரக்கம் என்ற பண்புடைமையுடனும் சமகால சூழமைவைப் புரிந்து கொண்டும் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

அதிலும் குறிப்பாக கொரோனாத் தொற்றினால் ஒருவர் இறந்து விட்டார் எனில், அது விடயத்தில் உறவுகளைக் கையாள்வதிலும் நிலைமையை அவர்களுக்கு எடுத்துரைப்பதிலும் நிதானமும் பரிவும் கொண்டவர்களை முன்னிலைப்படுத்த வேண்டும்.

இதற்கு மேலாக, கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாயின் அதுபற்றிய தகவலை அவர் தம் உறவுகளுக்குத் தெரியப்படுத்துவதில் எந்தக் காலதாமதத்தையும் ஏற்படுத்தக்கூடாது.

இதுவிடயத்தில் காட்டப்படும் அசமந்தத்தனங்கள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்யும்.

உதாரணத்துக்கு ஒருவர் உயிரிழந்துவிட்டார். அவரின் இறப்புக்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிவதற்கு முன்னதாக அவர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரா? என்பதை உறுதிசெய்து அதனை உறவுகளுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

இதைவிடுத்து பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நாளை வரும். நாளை மறுதினம் வரும் என்று காலதாமதத்தை ஏற்படுத்திவிட்டு,

சம்பந்தப்பட்டவர் கொரோனாவால் – நிமோனியாவால் இறந்துள்ளார். எனவே அவரின் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது என்று அறிவிக்கும்போது அதனால் சம்பந்தப்பட்டவரின் உறவுகளுக்கு ஏற்படக்கூடிய மனத்தாக்கம் சாதாரணமானதல்ல.

இதுவிடயங்களில் மிகவும் நிதானத்துடனும் பொறுப்புடனும் நடந்து கொண்டு மற்றவர்களின் மனங்களை நோகடிக்காமல் பார்த்துக் கொள்வது மருத்துவத் துறையினரது தலையாய கடமையாகும்.

# கல்விசார் நடவடிக்கைகளில்
# பெற்றோர்களின் மேலதிக ஒத்துழைப்பு தற்போதைய காலகட்டத்தில் அவசியம்
## வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்

(குப்பிழான்)

சாதாரண காலங்களில் பாடசாலைகள் நடைபெறுகின்ற போது பெற்றோர்களால் கிடைக்கப் பெறுகின்ற ஒத்துழைப்புக்களை விட தற்போதைய இந்தக் காலகட்டத்தில் மாணவர்களின் கற்றலைத் தொடர்வதற்கு அதிகளவான ஒத்துழைப்புக்கள் கிடைக்க வேண்டும் என வடக்குமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கே.ஜே. பிரட்லி தெரிவித்தார்.

நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்கள் கற்பதைப் பெற்றோர்கள் நன்கு கண்காணித்து மாணவர்களின் கற்றலுக்கு ஒத்துழைப்புக்கள் வழங்கவேண்டும்.

குறிப்பாக தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகளைப் பேணுவது அவசியமானது. இதன்மூலம் மாணவர்களுக்குத் தற்போது இணையவழி மூலமும், யுடியுப் (YouTube) தளங்கள் வாயிலாகவும் முன்னெடுக்கப்படும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்ள முடியும்.

இதனைவிட வீட்டிலிருந்து கற்பதற்கான இலகுவழிக் குறிப்புக்களும் பாடசாலைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

யாழ். பிரதேசத்தில் அட்டகிரி, மூத்த விநாயகர் கோவிலடி, நவாலி, கலையரசி வீதி, சென். பீற்றர்ஸ் வீதி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, சந்நிதி கோவில் தொண்டைமானாறு ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் 11 இ.எஸ். ஆர். இராணுவமுகாம், நந்திக்கடல், 12 சி.எல். ஐ. நந்திக்கடல், 16 இ. எஸ்.ஆர். நந்திக்கடல் வற்றாப்பளை, 59 ஆம் பிரிவு இராணுவமுகாம் வற்றாப்பளை, 6 ஆவது எஸ். எல்.ஏ. எஸ்.சி. இராணுவ முகாம் நந்திக்கடல், விமானப்படை முகாம் 2 வற்றாப்பளை, விமானப்படை முகாம் வற்றாப்பளை, இராணுவ முகாம் எரிபொருள் நிரப்பு நிலையம் வற்றாப்பளை, வற்றாப்பளை எஃப். எம்.ஏ. (எம். எல். டி) இராணுவ முகாம் நந்திக்கடல், குமுழமுனை பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை குமுழமுனை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முல்லைத்தீவு, மொத்த மற்றும் விநியோகம், முல்லைத்தீவு மருத்துவமனை (மாஞ்சோலை), விசேட அதிரடிப்படை தலைமையகம் வற்றாப்பளை, டயலொக் கோபுரம் குமுழமுனை, கேப்பாபிலவு, வற்றாப்பளை, குமாரபுரம், குமுழமுனை, மாமூலை நீர் வழங்கல் சபை, மாமூலை மொபிடல் கோபுரம் முள்ளியவளை, முள்ளியவளை (சாந்தி அம்மன் கோவிலடி), முறிப்பு சந்தி, நாவற்காடு வீதி வற்றாப்பளை, நாவற்காடு, முள்ளியவளை, முள்ளியவளை கலைமகள் பாடசாலையடி, முள்ளியவளை பொலிஸ் நிலையத்தடி, பளப்பாணி- முறிப்பு, பிலாக்குடியிருப்பு, பொன்னகர், முள்ளிய வளை, புதன்வயல் செங்குந்தா வீதி, தண்ணீரூற்று (கணுக்கேணி), தண்ணிமுறிப்பு, முள்ளியவளை மூன்றாம் வட்டாரம், வற்றாப்பளைச் சந்தி, வற்றாப்பளை கோவில் ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், ஹோட்டல் ஒவியா, லங்கா அரிசி ஆலை, மக்கள் வங்கி இராணி அரிசி ஆலை, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, முதலாவது குறுக்குத் தெரு, ஒஸ்ரியா ஸ்ருடியோ, பஜார்வீதி ஹொரவப் பொத்தானை வீதி, இலுப்பையடி சந்தி, கந்தசாமி கோவில் வீதி, குகன் மோட்டார்கள், 2 ஆவது குறுக்குத்தெரு, மில் வீதிச் சந்தி, பொலிஸ் நிலையம், பஸார் வீதி, இறம்பைக்குளம், ஆசைப் பிள்ளையார் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மனச்சோர்வை வெல்ல ஓர் வழி வலிவுடன் எதிர்த்து நிற்றல்

மனச்சோர்வுற்றிருந்த அருச்சுனனுக்கு மனவெழுச்சியை ஊட்டி, அருச்சுனனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவந்தார் ஸ்ரீகிருஷ்ணர். உங்களுக்கு மனச்சோர்வு ஏற்பட்டால் மருந்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும்- காரணம் எதுவாக இருப்பினும் சண்டையிடுங்கள், போராடுங்கள்.

வரம்பு மீறிய வலிவுடன் எதிர் நிற்றலும், மீண்டும் மனச்சோர்வை உண்டாக்குகிறது. அதுதான் மாமன்னர் அசோகருக்கு புத்தரிடம் அடைக்கலம் புகவேண்டியதாயிற்று.

மனச்சோர்வு, வலிவுடன் எதிர்நிற்றல் இவை இரண்டிலும் சிக்காமல் இருப்பவர்கள் தான் விவேகிகள்.

அதுதான் யோகியின் பொன்னான நெறி. விழித்தெழு, நீ ஒரு யோகி என்ற உண்மையை ஒப்புக்கொள். (முற்றும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### தர்ப்பைப் புல்லின் விசேட நன்மைகளை அறிந்ததுண்டா?

தர்ப்பை புல், இந்த பெயரைக்கேட்டாலே, அநேகம் பேருக்கு இது என்ன புல் என்றே கேட்பர். இன்றைய நாகரிக உலகில் தர்ப்பை என்பது, வெகு சிலர் மட்டுமே, அதுவும் சமயச்சடங்குகளில் மட்டுமே, பயன்படுத்தும் ஒரு விடயமாக ஆகிவிட்டது.

இறந்தவருக்கு திதி கொடுக்கும்போது ஐயர், இந்த தர்ப்பைப் புல்லை மோதிரமாக அணியவும், இடுப்பில் சொருகவும் சொல்வார்.

இந்த தர்ப்பைப் புல் நம் முன்னோர்கள், மாங்கலம், அமங்கலம் ஆகிய இரு வகைப்பட்ட வைதீகச் சடங்குகளிலும் இது சிறப்பாகப் பயன்படுத்துகின்றனர். தர்ப்பை மூன்று தோஷங்களைச் சமப்படுத்தும். அக்னிபோன்றது; உஷ்ண விரியம் உடையது, அதிவேகமுடையது, நீரை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது.

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# நீரிழிவைக் கட்டுப்படுத்த இலங்கை தமிழர்கள் பயன்படுத்தும் தாவரங்கள்

எழுதுபவர்: கலாநிதி.சரவணன் விவேகானந்தராஜா
[B.Sc.(Hons) Earth Sciences – UCL, UK; M.Sc. Analytical Chemistry - University of London, UK; Ph.D. Natural Products Research (Chemistry), Ethnopharmacology - UCL, UK]
கலாநிதி இ.கி.ஜெயசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



(30.04.2021 ஆம் திகதிய தொடர்ச்சி)

குறிப்பாக, சிறுநீர்ச்சோதனை (நீர்க்குறி), இரசவாதம் (அடிப்படை உலோகங்களைத் தங்கமாக மாற்றுவது), மற்றும் ஏராளமான மூலப் பொருட்களைப் பயன்படுத்துவது ஆயுர்வேதம் உள்ளிட்ட பிற பாரம்பரிய மருந்துவங்களை விட சித்த மருத்துவத்தின் தனித்துவமாகும்.

தற்போது, சித்த மருத்துவம் அவசர சிகிச்சைகளைத் தவிர, அனைத்து கோளாறுகளுக்கும் சிகிச்சையளிக்க ஏற்றதாகக் காணப்படுகிறது. மேலும், நனோத்துகள்களைக் கொண்டிருக்கும் மூலிகைத்தாது அல்லது மூலிகை உலோக மருந்துகள் உயிருக்கு ஆபத்தான மற்றும் நாட்பட்ட கோளாறுகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவுள்ளன.

சித்த மருத்துவத்தின் கொள்கை "பிரபஞ்ச - உடல் கொள்கை" (ஆண்ட பிண்ட தத்துவம்) அல்லது பிரபஞ்சத்திற்கும் மனித உடலுக்கும் இடையிலான தொடர்பாகும். மனித உடலின் பௌதிகவமைப்பானது பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, மற்றும் ஆகாயம் ஆகிய ஐந்து கூறுகளைக் கொண்டது. மனித உடலின் செயற்பாடுகள் உடலியல் அலகுகளான உயிர் தாதுக்களால் தக்க வைக்கப்படுகின்றன.

அவை வாதம், பித்தம், மற்றும் சிலேற்பனம் ஆகிய மூன்று சக்திகளென்றும் அழைக்கப்படுகின்றன. இந்த மூன்று சக்திகளின் ஏற்றத்தாழ்வு நோய்களை ஏற்படுத்துகிறது.

ஒவ்வொரு உயிரினமும் ஏழு அடிப்படை இழையங்களால் அதாவது ஏழு தாதுக்களான, சரம், குருதி, ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை, மற்றும் விந்து போன்றவற்றால் நிலை நிறுத்தப்படுகின்றது.

எட்டு சித்த வைத்திய நோயறிதல் முறைகள் உள்ளன. அவை நாடி, பரிசம், நா, நிறம், மொழி, விழி, மலம், மற்றும் மூத்திரம் என்பனவாகும். நீர்க்குறி எனப்படும் சிறுநீர்ச் சோதனையானது சித்த மருத்துவத்திற்கு தனித்துவமானது. இந்தச் சோதனையில், சிறுநீரின் மேல்விடப்படும் நல்லெண்ணெய்த் துளியின் வடிவமும் அதுபரவும் முறையும் அவதானிக்கப்படுகிறது.

இந்த நோயறிதலின் அடிப்படைக் கொள்கையானது சிறுநீரின் மேற்பரப்பிழு விசையுடன் தொடர்புடையது. சித்தர் யுகிமுனி நோய்களை 4,448 ஆக வகுத்துள்ளார். சித்த வைத்தியத்தில் மூன்று வகையான சிகிச்சைகளுள்ளன.

அவையாவன: தேவ மருத்துவம், மானிட மருத்துவம், மற்றும் அசுர மருத்துவம் (அறுவைச் சிகிச்சை) என்பவையாகும்.

மேலும், அதிசய, அதி நவீன, மற்றும் பொதுவான மருந்துகள் என மூன்று வகையான மருந்துகள் உள்ளன. மருந்து மூலப் பொருட்கள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவையாவன: தாவர வர்க்கம், தாது வர்க்கம், (உலோகங்கள் மற்றும் தாதுக்கள்), மற்றும் ஜீவவர்க்கம் என்பவையாகும். சித்த வைத்தியத்தில் உபயோகிக்கும் 80 வீதத்துக்கும் அதிகமான மருந்துகள் தாவர மூலப்பொருட்களை மட்டுமே கொண்டவையாகும். சிகிச்சைகள் தனிப்பட்டவை.

சுற்றுச்சூழல், நோயாளியின் நிலை, வயது, பால், வாழ்க்கை முறை, வாழ்விடம், மனநிலை, வானிலை, பசி, மற்றும் உடலியலமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தான் ஒருவருக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

இந்தக் கட்டுரையில் சித்த / தமிழ் வைத்தியத்தில் நீரிழிவைக் கட்டுப்படுத்த உபயோகிக்கும் தாவரங்கள் பற்றிய தகவல்களைப் பெற, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பின்வரும் ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன:

1. பரராசசேகரம் (ஐந்தாம் பாகம்)

இந்த நூல் 1478 முதல் 1519 வரையான காலப்பகுதியில், மன்னர் பரராசசேகரனின் கீழ் தொகுக்கப்பட்டது.

2. செகராசசேகர வைத்தியம்

இந்த நூல் 1380 முதல் 1414 வரையான காலப்பகுதியில், மன்னர் செகராசசேகரனின் கீழ் தொகுக்கப்பட்டது.

3. சித்த ஔடத செய்முறை

இந்த நூல் 1980 ஆம் ஆண்டு எஸ்.எம்.பொன்னையா மற்றும் ஐ.சபாபதிப்பிள்ளை ஆகியோரால் தொகுக்கப்பட்டது.

### சித்த / தமிழ் மருத்துவத்தில் நீரிழிவு நோயின் பண்புகள்

சித்த வைத்தியத்தில் நீரிழிவானது சலக் கழிச்சல், சலரோகம், மற்றும் மதுமேகம் என்றும் அழைக்கப்படுகிறது. இது அடிக்கடி சூடான சிறுநீரைக் கழிப்பது, நுரையுடன் கூடிய சிறுநீரைக் கழிப்பது என வகைப்படுத்தப்படுகிறது. இது குணப்படுத்த முடியாத நோயாகும். இது இருபது வகை மேக நோய்களுக்குள் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இவை மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: பித்தமேகம் (ஆறு வகைகள்), வாதமேகம் (நான்கு வகைகள்), மற்றும் சிலேற்பன மேகம் (பத்து வகைகள்) முதலியனவாகும்.

### நீரிழிவு நோய்க்கான காரணங்கள்

நெய், தயிர், பால் (இவை உடலின் குளிர்ச்சியை அதிகரிக்கும் பதார்த்தங்கள்), புளிப்பு உணவுகள், இரசம் போன்றவற்றை அதிகமாக உட்கொள்வது, இறைச்சி உட்கொள்வது, அதிகமாக அல்லது பற்றாக் குறையாக உணவை உட்கொள்வது (உண்ணும் கோளாறு), ஒழுங்கற்ற நேரங்களில் உணவுகளை உட்கொள்வது (ஒழுங்கற்ற உணவு), உடலில் எண்ணெய் தடவாதது, வெயிலில் அதிகமாக நடப்பது, ஆகியவை நீரிழிவு நோய்க்கான காரணங்களாகக் கருதப்படுகின்றன.

### நீரிழிவுக்கான அறிகுறிகள்

சோம்பல், அதிகப்படியான வியர்வை, உடல் நாற்றம், எப்போதும் தூங்கவிரும்புவது, நாக்கில் எண்ணெய் உருவாக்கம், வாயில் இனிப்புச் சுவை, குளிர்பானங்கள் மற்றும் குளிர் உணவுகளை உட்கொள்ள ஆசைப்படுவது, உலர் நெஞ்சு மற்றும் தொண்டை, முடி மற்றும் நகங்களின் விரைவான வளர்ச்சி, எறும்புகள் மற்றும் ஈக்கள் சிறுநீரில் மொய்ப்பது, வயிற்றிலெரியுமுணர்வு, உடல் சருமத்தின் வெளிர்மை, எடையிழப்பு, நிதானமிழப்பு, அதிக தாகம், இரவில் அதிகப்படியான சிறுநீர் கழித்தல், நடப்பதில் சிரமம், ஈரப்பதமான, பனி மூட்டம், மற்றும் மழை நாட்களில் மங்கலான பார்வை, அதிகப்படியான சிறுநீர் கழித்தல், மனச்சோர்வு, நடப்பதில் சிரமம், மங்கலான பார்வை, மோர் மற்றும் தேங்காய் நீரைக் குடிப்பதன் மூலம் தாகத்தைத் தணிக்க விரும்புவது, பசியின்மை, வறண்ட நாக்கு, உடல் வலி, பகல் மற்றும் இரவு நேரங்களில் தெளிவான மற்றும் நுரை இல்லாத சிறுநீர் கழிவது, தீவிரமான வலி, காதடைப்பு, தூக்கமின்மை, இனிப்புச் சுவையான சிறுநீர், இரவில் தேங்காய் நீரின் பண்புகளுடன் சிறுநீரைக் கழித்தல், உடல் பலவீனம், போன்ற அறிகுறிகள் காணப்படுவதுடன், மரணத்தையும் ஏற்படுத்தக் கூடும்.

### நீரிழிவின் வகைகள்

சித்த மருத்துவத்தில், 24 வகையாக நீரிழிவு வேறுபடுத்தப்பட்டு, அவை ஏழு பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. பெரும் பிரிவுகள் மனித உடலில் அடிப்படைக் கூறுகள் ஏற்படுத்தும் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. சிறுநீரின் சுவை மற்றும் வாசனையின் அடிப்படையில் வகைகள் அடையாளம் காணப்படுகின்றன. ஏழு பெரும் பிரிவுகளாவன:

1. வாத நீரிழிவு
2. வாதபித்த நீரிழிவு
3. பித்த நீரிழிவு
4. பித்தவாத நீரிழிவு
5. சிலேற்பன நீரிழிவு
6. சிலேற்பன பித்த நீரிழிவு
7. சிலேற்பன வாத நீரிழிவு

(தொடரும்)

## வவுனியாவில்...

தொற்றுநோயால் நேற்று மரணமடைந்துள்ளார்.

குறித்த பெண் சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றைய தினம் மரணமடைந்துள்ளார். (ம-3,250,299)

## பாராளுமன்றில்...

அதன் அடிப்படையில் 89 மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்திற்கு அரச கட்சிகள் அனைத்தும் ஆதரவு வழங்கியதுடன் ஐக்கிய மக்கள் சக்தி தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பன எதிராக வாக்களித்திருந்தன. (ம-3)

## கிளிநொச்சியில்...

துள்ளது.

குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் குறித்த தகவல்கள் தொற்றாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று சுகாதாரத் திணைக்களத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

(ம-3,100,316)

## புதிய சட்டமா...

மன்றப் பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபராக செயற்பட்ட தப்புல டி லிவேராவின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

பிரதிமன்றாடியார் நாயகம் சஞ்சய்ராஜரட்ணத்தை சட்டமா அதிபராக நியமிக்க பாராளுமன்றப் பேரவைக்கு ஜனாதிபதியினால் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இதன்படி பாராளுமன்றப் பேரவை ஜனாதிபதியின் தீர்மானத்துடன் இசைந்து செல்ல முடிவு செய்துள்ளது.

அவர், இலங்கை சோசலிஷ குடியரசாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், இலங்கையின் சட்டமா அதிபராக பதவி ஏற்கவுள்ள 3ஆவது தமிழரும், 4ஆவது சிறுபான்மையினத்தவருமாவார். (ம-3)

## யாழில் 62...

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 62 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 6 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 71 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை வைத்தியசாலையில் 3 பேருக்கும் பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒருவருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒருவருக்கும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஒருவருக்கும் மானிப்பாய் வைத்தியசாலையில் ஒருவருக்கும், கோப்பாய் வைத்தியசாலையில் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 31 பேருக்கும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேருக்கும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 4 பேருக்கும் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும்,

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் யாழ்.சிறைச்சாலையில் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 பேருக்கும் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 பேருக்கும்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டத்தில் கரைச்சிசுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 3 பேருக்கும், கண்டாவளை சுகாதார வைத் திய அதிகாரிபிரிவில்3பேருக்கும்தொற்றுஉறுதி செய்யப்பட்டிருக்கின்றது. (ம-3,18,33)

## சுன்னாகத்தில்...

ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுன்னாகம் புதிய அந்தோனியார் வீதியைச் சேர்ந்த செ.பத்மநாதன் (வயது-78) என்பவராவார்.

குறித்த முதியவர் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

(ம-3,18,33,60)

## மனைவிக்கு...

சாலையின் முன்பாக 3 சிறுவர்களும் தந்தையும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் நேற்றிரவு ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்றாளர்கள் 21 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒரு பெண்ணின் பிள்ளைகளும் கணவனுமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து பெண்ணின் கணவன் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி அக்கராயன் மணியங்குளத்தினைச் சேர்ந்த தன்னுடைய மனைவிக்கு நேற்று பிற்பகல் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்ற போதிலும் தனக்கு குறித்த தகவல் அறிவிக்கப்படவில்லை என்றும் குழந்தைகளை வைத்துக் கொண்டு தாம் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேரிடுவதாகவும் தம்மை சுகாதார நடைமுறைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்துமே போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளார். (ம-3,100)

## நாடு முழுவதும்...

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது,

இன்று இரவு 11மணிதொடக்கம்25ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை பயணக் கட்டுப்பாடு மிக இறுக்கமாக நடைமுறையில் இருக்கும். அதனையடுத்து 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என தெரிவித்திருக்கும் இராணுவத் தளபதி,

தொடர்ந்து 25 ஆம் திகதி இரவு 11 மணிக்கு மீண்டும் நாடளாவிய ரீதியில் போக்குவரத்து கட்டுப்பாடு அமுல் படுத்தப்பட்டு 28 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும்.

இவ்வாறு போக்குவரத்து கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருக்கும் போது அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு சுகயீனம் அல்லது மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலைகளுக்கு செல்பவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தவிர வேறுஎந்த வொரு காரணிகளுக்காகவும் யாரும் அநாவசியமாக நடமாடுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் அன்றைய தினம் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு அமையவே வெளியில் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்கள் தொழிலுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரம், நீர், மின்சாரம், தொடர்பாடல், ஊடகம், துறைமுகம், விமான நிலையம், தனியார் பாதுகாப்பு துறை உள்ளிட்ட பிரிவுகளில் பணிபுரிபவர்கள், பணிக்குச் செல்ல முடியும்.

அதனை உறுதிப்படுத்துவதற்காக தொழில் அடையாள அட்டை அல்லது ஆவணம் அவர்கள் வசமிருக்க வேண்டும். (ம-3)

# அச்சுவேலியில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் யாழ்.அச்சுவேலியில் 21 வயதான இளைஞனை இராணுவம் நேற்று கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளையும் இராணுவம் மீட்டிருக்கின்றது. (ம-3)

## இலங்கையில்...

றுக்க உள்ளானோர் தொகை 154, 784 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)






















## COMPUTER TRAINING
(ONLINE)

Basic, Web Development,
Software Development
(Project Base)

✆ - 074 138 3368


போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான

# நீதியை அரசாங்கம் உறுதி செய்யவில்லை

### சர்வதேச மன்னிப்புச் சபை

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட உள்ளகப் பொறிமுறை தோல்வியடைந்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபையினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி, இழப்பீடு என்பவற்றை வழங்குவதுடன் மீள்நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நாம் கடந்த 12 வருட காலமாக வலியுறுத்திவருகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)


## காணி விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட (யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம்) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.

077 288 0152
077 235 2656
074 075 4204

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில்
33 பரப்புக் காணி விற்பனைக்கு.
(2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்
(யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)

076 221 2037
077 203 6402

## IMMEDIATE VACANCY FOR RADIOGRAPHER (FULL TIME)

**Ruhbins Hospital (Pvt) Ltd is looking for a Radiographer to work full time.**

### Responsibilities:

- Plans, supervises, monitors, and assigns work to X-Ray technicians.
- Evaluates and monitors the X-Ray quality assurance programs.
- Implements standards and procedures for processing X-Ray images.
- Arranges and monitors the periodic testing of all X-Ray images and processing equipment with vendors and appropriate federal, state, and local regulatory agencies.
- Maintains records of testing.
- Arranges for maintenance and repair of equipment; prepares reports with recommendations for the disposal of equipment.

### Requirements:

- Degree or Diploma in Diagnostic Radiography with SLMC license.
- Minimum of 2 years post qualification experience.
- Knowledge of the healthcare service sector and the systems and processes used.
- Proven ability to work under pressure.

(C-2180)

Attractive remuneration packages commensurate with the qualification and experience are on offer to the selected candidates. Interested candidates are requested to forward their CV with contact details of two non-related referees within 07 working days by email. The position being applied for must be clearly mentioned on the subject line of the e-mail. Please call 0212261500 / 021 492 7232 for further clarifications

email : admin@ruhbinshospitals.com
Ruhbins Hospital (Pvt) Ltd,
160, Point Pedro Road, Nelliady.

## CHEMISTRY A/L

zoom இருந்தாலும் Tutor அவசியம். வீடு வந்து கற்பித்தல். English / Tamil Medium
யாழ். / கிளிநொச்சி / வவுனியா மாவட்டம்.
(5915)
சிங்கம் மாஸ்டர் - 076 056 5786

## Biology A/L

வளநூலை பரீட்சைக்கு ஏற்ப மாற்றுதல் யாழ். / கிளிநொச்சி / வவுனியா மாவட்டம் வீடு வந்து
உயிரியலுக்கு வழிகாட்டல்
(5915)
N. இந்திரா - 077 665 5290

## அன்னா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388

## விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
✆ 0768226240
DHL



# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 1937.08.31
விண்ணில் : 2017.05.21

அமரர்

## திருமதி பொன்னு சின்னையா

தினம் உன்னைதரிசித்தே-அம்மா
மனம் அமைதிஅடைகிறேன் நாழிகையில்
பலர் இங்கே இருந்தாலும்-வாடா
மலராக என்னோடு வாசமாகிறாய் பொழுதினில்
ஆண்டுகள் நான்கானதையே-அம்மா
நானறிகிலேன் - உன் நினைவுடன்
நித்தம் நான் இருப்பதனாலேயோ- மீண்டும்
வருவாய் எனநின்வாசல் பார்த்து.

உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.